Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | தை-23 | 05-02-2005 | சனிக்கிழமை | ஓசை -353


177D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த
சிறி கருமாரி நகையகம்
தற்போது புதியஇடத்தில்...
அசல் 22 கரட் தங்கத்தில் தங்கநகைகளை செய்து பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
சிறி கருமாரி நகையகம்
205/6, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2225385 (சி-11257)

### சிறிலங்காவின் 57ஆவது சுதந்திர நாளில்

# கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு தாயகத்தில் துக்கம் அனுஷ்டிப்பு!


## பல்வேறு கோரிக்கையின் அடிப்படையில் மக்கள் மறியல் ஆர்ப்பாட்டங்கள்

(நமது நிருபர்)

**சிறிலங்காவின் 57ஆவது சுதந்திர நாளான நேற்று தமிழர் தாயகம் எங்கும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப் பட்டதோடு இயல்பு வாழ்க்கையும் பாதிப்பிற்குள்ளானது. இதேவேளை இந்நாளில் அரசிற்கு எதிரான பல போராட்டங்கள் வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்றன.**

நேற்றைய தினத்தில் தமிழர் தாயகத்தில் பரவலாகவே கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதாகவும் இருந்தது. சில பகுதிகளில் துக்க தினத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டமையால் இயல்பு வாழ்க்கையும் பாதிப்பிற்குள்ளானது.

(12ஆம் பக்கம் பார்க்க)


யாழ். பல்கலைக்கழக வாயிலில்

### மட்டக்களப்பு கிரானில்

## இனந்தெரியாதோரின் சூட்டில் இளைஞர் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரானில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒரு இளைஞர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். கிரான் விஷ்ணு கோவிலுக்கு அருகாமையில் நேற்றுக்காலை உந்துருளியில் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் மீது இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினாலேயே உந்துருளியில் சென்று கொண்டிருந்த சின்னத்துரை தேவதாசன் என்றபர் கொல்லப்பட்டதுடன் இவருடன் கூடச்சென்றவரான வரதன் என்பவர் படுகாயமடைந்தார்.

மரணமானவரின் உடல் வாழைச்சேனை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

## வலி.வடக்கு இடம் பெயர்ந்த மக்கள் பிரதேச செயலகம் முன் மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்குப் பிரதேசங்களில் இருந்து மக்கள் சொந்த இடங்களில் தம்மை மீளக் குடியமர்த்த நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரியும் சிறிலங்கா சுதந்திரமடைந்து 57 ஆண்டுகள் கடந்து விட்டாலும் கூட தமிழினம்


மறியல் போராட்டம்

அரசினால் தொடர்ந்து அடக்கி ஒடுக்கப்பட்டு வருகின்றமையை கண்டித்தும் தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்றுக் காலை 9.30 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரையில் நடைபெற்ற இப் போராட்டத்தின் போது

சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமது சொந்த இடங்கள் விடுவிக்கப்பட்டு அங்கு தாம் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்பதையும் அந்நியர் ஆதிக்கத்திலிருந்து சிறிலங்கா சுதந்திரமடைந்து 57 ஆண்டுகள் கடந்து விட்டாலும் ஈழத்தமிழினத்தை இலங்கை அரசு அடக்கியாள முற்படுகிறது. இதனை ஒரு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தென் பகுதி மீது காட்டும் அக்கறை கிழக்கு மக்கள் மீது இல்லை

### –அரசைக்கண்டித்து கிழக்கு மக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் சாய்ந்த மருது மற்றும் கோட்டைக் கல்லாறு மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்குக் காட்டப்படும் ஆதரவை கிழக்குப் பகுதி மக்கள் மீது அரசு காட்டவில்லை எனக் கூறி ஆர்ப்பாட்டங்களை நடத்தி யுள்ளனர்.

நேற்று நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டம் அம்பாறை, சாய்ந்த மருது உட்பட அம்பாறை

(12ஆம் பக்கம் பார்க்க)

## க.கா.குழு பதில் தலைவர் வருகை

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பதில் தலைவர் இன்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார். இன்று காலை உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடையும் இவர் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்திப்பார். முன்னதாக நோர்வேத்

(12ஆம் பக்கம் பார்க்க)



## முல்லையில் இடம்பெயர்ந்த மக்களை விரைவில் இடைத்தங்கல் முகாம்களில் குடியமர்த்த முடிவு

சுனாமிப் பேரலையின் தாக்கத்தால் இடம் பெயர்ந்து வாழும் மக்களை மிக விரைவாக இடைத்தங்கல் முகாம்களில் குடியமர்த்துவதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 3.30 மணிக்கு தமிழீழ கடற்படைத் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களின் தலைமையில் முல்லைத்தீவு செயலணிக்குழு வளாகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இத்தீர்மானமெடுக்கப்பட்டது.

சுனாமிப் பேரலையினால் முற்றாக அழிவுக்குள்ளான முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து பாடசாலை, பொது மண்டபங்கள் போன்ற நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்களை அமைப்பதில் ஏற்பட்டுள்ள மந்தநிலை தொடர்பாகவும், இடம்பெயர்ந்த ஒவ்வொரு கிராமங்களுக்குமான மீன்பிடித்துறைகளை தெரிவு செய்தல் மற்றும் வாடி வீடு அமைப்ப

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு 2 ஆம் வட்டாரத்தில் ஒரு ஏக்கர் காணி விற்பனைக்குண்டு 1/2 ஏக்கராகவும் வழங்கப்படும். விலை நேரில் பேசிக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு:-குணம் தேநீர்க்கடை தீன்சுவை அருகாமை, முல்லைச் சாலை, புதுக்குடியிருப்பு.(5673)

### பொய்கை

சகலவிதமான கணினி வேலைகளும் விரைவாகச் செய்து கொடுக்கப்படும். அத்துடன் அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள். பொய்கை. கனகபுரம், தெரு கிளிநொச்சி. (5627)

### காணி விற்பனைக்குண்டு

ஏ-9 வீதியிலிருந்து வண்டோட்டினூடாக 500 மீற்றர் தூரத்திலுள்ள 1/2ஏக்கர் உறுதிக்காணி, கட்டுக் கிணறு, வீட்டுடன் கூடியது விற்பனைக்குள்ளது. தொடர்புகளுக்கு கோ.சிவராஜா, இல39, திருநகர் வடக்கு,கிளிநொச்சி. (5633)

### தவறிவிட்டது

சுந்தரலிங்கம் விஜயரூபன் 247, 3ஆம் யுனிற்,மல்லாவியை வசிப்பிடமாகக் கொண்ட எனது தே.அ. அட்டை 773144346 V சாரதிப் பத்திரமும் 04.02.2005 அன்று முகமாலைக்கும் மல்லாவிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளி.மாவட்டத்திலுள்ள ICRC அலுவலக கிளை எதிலும் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றேன். தகவல்:-சு.விஜயரூபன், T.P 0712348783 தொடர்புகொள்ளலாம். (5637)

# செயற்கை முறை சினைப்படுத்தல் அபிவிருத்திக்காக நடவடிக்கை

(ஒட்டுசுட்டான்)

காராளி கால்நடை செயற்கை முறைச்சினைப்படுத்தல் நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வன்னிப்பகுதியிலுள்ள கால்நடை வைத்திய நிலையங்களுக்கும் பிரத்தியேக தொழில் நுட்பவியலாளர்களுக்கும் வழங்கப்பட்ட விந்து குப்பியின் விலை பத்து ரூபாவிலிருந்து 2005 தை மாதம் மாட்டின் விந்து குப்பி நூறு ரூபா எனவும் ஆட்டின் விந்து குப்பி 50 ரூபா எனவும் அதிகரிக்கப்பட்டது.

இவ்விலை அதிகரிப்பை மக்கள் நலன் கருதி கால்நடை வளப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் கமக்கார அமைப்புகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர்கள் ஆகியோர் விலை குறைப்பு செய்ய கேட்டுக் கொண்டதிற்கு இணங்க மீண்டும் 2005 மாசி மாதம் தொடக்கம் வழமைபோல் விந்து குப்பி ஒன்றின் விலை பத்து(10/-) ரூபாவாக குறைப்பு செய்துள்ளது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளதாக காராளி கால்நடை செயற்கை முறை சினைப்படுத்தும் நிலைய பொது முகாமையாளர் மா.மகாதேவன் அறியத்தந்துள்ளார் (05)

# விதை உற்பத்தியாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட விதை உற்பத்தியாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த புதன்கிழமை மு.ப. 10.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் அமைப்புக் காரியாலய கேட்போர் கூடத்தில் உணவு விவசாய ஸ்தாபன கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் இ.மா. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கான மங்கல விளக்கினை கிளி. மேலதிக அரசாங்க அதிபர் நா. வேதநாயகம், உணவு விவசாய ஸ்தாபன தேசிய இணைப்பாளர் டாக்டர் விவேகான்ந்தன், உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) திருமதி. சீ. ஆனந்தராசா, உதவி ஆணையாளர் திருமதி பி.நர்மகள் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியினை த.பொ.மே.நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் ப.பத்மநாதன் தலைவராகவும், கு.இராசேந்திரன் செயலாளராகவும், க. தங்கராசா பொருளாளராகவும், ஐ. உருத்திரசிங்கம் துணைத் தலைவராகவும், ம. புவனேந்திரன் துணைச் செயலாளராகவும் அத்துடன் நாலு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (சோ)

## சாவு அறிவித்தல்

### திருமதி.பிரபாகரன் விமலா

திருமதி,பிரபாகரன் விமலா அவர்கள் 04.02.2005 அன்று காலமாகிவிட்டார். அன்னார் முன்னாள் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனப் பணியாளரும், முரசுமோட்டை முன்னாள் முன்பள்ளி ஆசிரியையும் ஆவார்.

இவர் முரசுமோட்டை 250/1, 1 ஆம் யுனிற்றை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி.கதிரவேலு சந்திரவதியின் மகளும், இரத்தினாகரனின் (கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கப் பணியாளர்) சகோதரியும், பவித்திராவின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் அவரது இல்லத்தில் 05/02/2005 இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முரசு மோட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
ச.விநாயகமூர்த்தி
(மாமா)

(சி.5476)

-1991 இல் சிறிலங்காவின் சுதந்திர தினத்தன்று-

# விமான தாக்குதலில் பலியான பொது மக்களின் நினைவு நாள் உருத்திரபுரத்தில் அனுஷ்டிப்பு



(அலுவலக செய்தியாளர்)

கடந்த 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி சிறிலங்காவின் சுதந்திர தினத்தன்று உருத்திரபுரம் சூழாவடியில் சிறிலங்கா விமானப்படைக்குண்டு வீச்சில் பலியான அப்பாவிப் பொது மக்கள் ஒன்பது பேரின் 14 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று சம்பவம் இடம்பெற்ற இடத்தில் அமைக்கப் பெற்ற நினைவுத் தூபியில் இடம் பெற்றது.

உருத்திரபுரம் வலயதேசிய எழுச்சிப்பேரவை செயலர் த.அருந்தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நினைவு நிகழ்வில் கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலர் சு.பசுபதிப்பிள்ளை, கிளிநொச்சி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் போர்பிரியன், பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலர் நேசன், பரஞ்சோதி ஆகியோர் ஈகச்சுடரினை ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். பொது ஈகச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் திருமாறன் ஏற்றிவைக்க, நினைவுக்கல் வெட்டிற்கான மலர்மாலையினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் அணிவித்தார். தொடர்ந்து நினைவுத்தூபிகளுக்கான மலர் அஞ்சலி நிகழ்வினை கிளி.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பூவிழி ஆரம்பித்து வைக்க, உயிர் நீத்த 9 பொது மக்களின் நினைவுத் தூபிக்கு அவர்களின் பெற்றோர், உறவினர்கள் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம் பெற்றது. (சோ)

# கால்நடைகளுக்கான நோய்த்தடுப்பு முழங்காவிலில் பயிற்சி வகுப்பு

(ஒட்டுசுட்டான் செய்தியாளர்)

முழங்காவில் திக்குவில பகுதியில் பயிற்சி வகுப்பும் கால்நடைகளுக்கான நோய்த்தடுப்பு மருந்தும் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 8.00 மணியளவில் திக்குவில் கமக்கார அமைப்புத்தலைவர் அ.தர்மராசா தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பும் 250 கால்நடைகளுக்கு தடுப்பு மருந்தும் ஏற்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் பூநகரி கால்நடை அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து இதனை நடாத்தியது. இதில் கருத்துரைகளை அரசியல் துறையின் முழங்காவில் பிதேசப்பொறுப்பாளர் த.தமிழரசன், பிரதேச, இணைப்பாளர் றஞ்சன் குமார், ஜெயபுரம் வடக்கு கிராம அலுவலர் இராசரட்ணம், த.பொ.மே.நிறுவன கிளி.மாவட்ட விலங்குவேளாண் திட்ட இணைப்பாளர் மு.சிவனேசன் ஆகியோர் வழங்கினர். பயிற்சி வகுப்பினை பூநகரி கால்நடை அபிவிருத்தி அலுவலர் க.சூரியகுமார் வழங்கினார். (05)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மீனவர்களுக்கான அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் ஆதரவுடன் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பினரால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மீனவர்களின் எஞ்சிய இயந்திரங்களும், உடைந்த படகுகளும் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இச்சேவையினைப் பெறவிரும்பும் மீனவர்கள் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கசமாசத் தலைவரூடாக உறுதிப்படுத்தி எமது அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இந்தத் திருத்த வேலைகள் முடிவடைய உள்ளதால் தங்கள் இயந்திரங்களையும், படகுகளையும் உடன் திருத்தும் நிலையத்திற்கு கொண்டு வருமாறு வேண்டுகின்றனர்.

தொடர்பு கொள்ளப்படவேண்டிய முகவரி.


தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு,
கடற்றொழிலாளர்களுக்கான
இலவசசேவை நிலையம்,
சிலாவத்தை, முல்லைத்தீவு.

(5640)

# மத்திய கிழக்கின் அமைதிக்காக தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளுடன் போராட வேண்டியுள்ளது

*-அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவிப்பு*

(வோஷிங்டன்)



**மத்திய கிழக்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்டத் தொடர்ந்து தீவிரவாதிகளை ஆதரிக்கும் நாடுகளுடன் போராட வேண்டியிருக்கிறது. சிரியா தன் பகுதியையும், லெபனானின் ஒரு சில பகுதிகளையும் பயன்படுத்திக் கொள்ள தீவிரவாதிகளை அனுமதித்து இருக்கிறது. இன்று தீவிரவாதத்துக்கு ஊற்றுக் கண்ணாக இருக்கும் ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டு கூட்டத்தில் சனாதிபதி புஷ் உரை நிகழ்த்தினார். அப்போது அவர் கூறியதாவது:-

"சவுதி அரேபியா- எகிப்து ஆகிய நாடுகள் விரைவில் சனநாயக ஆட்சியைக் கொண்டு வரவேண்டும். ஈராக் பலஸ்தீனம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் சமீபத்தில் தேர்தல் நடந்து முடிந்துள்ளன. மொராக்கோவில் இருந்து ஜோர்டான், பக்ரைன் வரை சீர்திருத்தம் ஏற்கனவே தொடங்கி விட்டது.

மேற்கு ஆசியாவிலுள்ள நமது அணியைச் சேர்ந்த நாடுகளான சவுதிஅரேபியா, எகிப்து ஆகிய நாடுகள் தங்கள் மக்களுக்கு கூடுதல் சுதந்திரம் வழங்க வேண்டும். அந்த நாடுகள் சனநாயக ஆட்சி முறைக்கு விரைவில் மாற வேண்டும்.

மத்திய கிழக்கில் அமைதி ஏற்பட வழி காண்பித்த எகிப்து, மத்திய கிழக்கில் சனநாயகத்துக்கு திரும்பும் பாதையை காட்ட வேண்டும்.

மத்திய கிழக்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட தொடர்ந்து தீவிரவாதிகளை ஆதரிக்கும் நாடுகளுடன் போராட வேண்டியிருக்கின்றது. சிரியா தன் பகுதியையும், லெபனானின் ஒரு சில பகுதிகளையும் பயன்படுத்திக் கொள்ள தீவிரவாதிகளை அனுமதித்து வருகிறது.

சிரியா அரசாங்கம் தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளிப்பதை கைவிட்டு விட்டு, சுதந்திரத்துக்கு கதவைத் திறந்து விட வேண்டும்.

இன்று தீவிரவாதத்துக்கு ஊற்றுக் கண்ணாக இருக்கும் ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. யுரேனியத்துக்குச் செறிவூட்டும் திட்டத்தை கைவிடச் செய்ய நாங்கள் ஐரோப்பிய தோழர்களுடன் சேர்ந்து முயற்சி மேற் கொண்டுள்ளோம். ஈரான் மக்கள் சுதந்திரத்துக்காக தவிக்கிறார்கள். அவர்களுக்குப் பக்க பலமாக அமெரிக்கா நிற்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன். அணு ஆயுதம் தயாரிக்கும் திட்டத்தை வட கொரியாவை கைவிடச் செய்ய நாங்கள் பாடுபட்டு வருகின்றோம்.

ஈராக்கில் இருந்த இராணுவத்தை திருப்பப் பெறுவதற்கு செயற்கையாக கால அட்டவணை எதையும் நாங்கள் தயாரிக்கவில்லை. அப்படி ஒரு அட்டவணையைத் தயாரித்தால் அது தீவிரவாதிகளுக்கு துணிச்சலைக் கொடுத்து விடும்.

ஈராக் மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளத் தயாராகும் வரை அமெரிக்க இராணுவம் ஈராக்கை விட்டு வெளியேறாது.

ஈராக் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்காக நாங்கள் பாடுபடுகிறோம். ஈராக் சுதந்திரமாக இருக்கும் வரை அமெரிக்கர்கள் பாதுகாப்பாக இருக்க முடியும்.

இஸ்ரேலும், பலஸ்தீனமும் அருகருகே அமைதியுடன் 2 தனி நாடுகளாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் லட்சியம் விரைவில் எட்டப்படும்.

பலஸ்தீனியர்களின் பொருளாதார பாதுகாப்புக்கு உதவ 1,750 கோடி ரூபாய் தேவைப்படுகின்றது. அதற்கு பாராளுமன்றம் அனுமதி வழங்க வேண்டும் என்று கூறினார்.



காபூலில் போக்குவரத்து விதியொன்றில் ஆப்கான் போக்குவரத்துப் பொலிசார் பனிப்பாறையை அகற்றுகின்றனர்.

## கூடைப்பந்¿ ட்டப் போட்டியில் மாணவிகளிடையே கைகலப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பெண்கள் பாடசாலை ஒன்றில் விளையாட்டுப் போட்டியில் ஏற்பட்ட குழு மோதல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கூடைப்பந்துப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை மாணவிகள் திடீரென இரு குழுக்காளக மோதிக் கொண்டிருந்தனர். பொலிசார் இறப்பர் குண்டுகளை சுட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

## சீனாவில் குழந்தைகள் விற்பனை; 40 பேர் பொலிசாரால் கைது

(பெய்ஜிங்)

சீனாவில் ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தைத் திட்டம் என்று சட்டம் கொண்டு வரப்பட்டு இருப்பதால் பெண் குழந்தை மட்டும் பெற்றவர்கள் ஆண் குழந்தைகளுக்கு ஆசைப்படுவது உண்டு. இந்த ஆசையை பயன்படுத்திக் கொண்டு குழந்தை விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. இதற்காக குழந்தைகள் கடத்தப்படுகின்றன. கடத்தல்காரர்கள் பாலூட்டும் தாய்மார்களுடன் ஊர் ஊராக செல்வது உண்டு.

பொலிசார் 40 கடத்தல்காரர்களை கைது செய்தனர். 44 குழந்தைகளை மீட்டனர்.

2003ஆம் ஆண்டு 200 குழந்தைகளை விற்ற 60 கடத்தல்காரர்களில் சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. சிலருக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

## செசன்யாவில் ஒரு மாத யுத்த நிறுத்தம்; தீவிரவாதிகள் ஒரு தலைப்பட்சமாக அறிவிப்பு

(மொஸ்கோ)

செசன்யா தீவிரவாதிகளின் தலைவர் அஸ்லான் மஸ்கடோவ் வெளியிட்டுள்ள ஒரு உத்தரவில் அனைத்துத் தீவிரவாதிகளும் ரஷ்யாவுக்கு எதிராக இந்த ஒரு மாதத்துக்கு போர் நிறுத்தம் செய்யும் படி கூறியிருக்கிறார்.

இந்த உத்தரவு செசன்யா தீவிரவாதிகளின் இணையத் தளத்தில் இடம்பெற்றுள்ளது.

ரஷ்யாவால் தேடப்பட்டு வருபவரும் பொஸ்லான் பள்ளிக் கூடத்து மாணவர்களை சிறைப் பிடித்தவருமான பசயேல் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அஸ்லானின் உத்தரவை மேற்கோள்காட்டி வருகிற 22 ஆம் திகதி வரை எந்த விதமான தாக்குதலும் நடத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு இருக்கின்றார்.



இந்தோனேசிய பண்டார ஆசே மாநிலத்திலுள்ள முஸ்லிம்களின் அகதி முகாம்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள பள்ளி வாசலில் வெள்ளிக் கிழமைத் தொழுகையில் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

## பாப்பரசரின் உடல் நிலை தேறுகின்றது

(ரோம்)

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப் ஆண்டவர் 2ஆம் ஜோன்பால் "புளு" காய்ச்சல் மற்றும் மூச்சுத் திணறல் காரணமாக ரோம் நகரில் உள்ள "ஜெமில்லி" வைத்திய சாலையில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு சேர்க்கப்பட்டார்.

84 வயதான அவரது உடல் நிலை தேறி வருகிறது. இன்னும் ஒரு வாரம் அவர் தங்கி சிகிச்சை பெறுவார் என்று அவரது மருத்துவ செயலாளர் நவரோ வால்ஸ் கூறினார்.

அவரது மருத்துவ பரிசோதனை முடிவுகள் திருப்தி கரமாக உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

## அவுஸ்திரேலியாவில் கடும் காற்றுடன் பலத்த மழை 150 ஆண்டுகளில் நடத்த பேரனர்த்தம்!

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் கடந்த சில நாட்களாக காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்து வருகிறது.

மெல்பேர்ன் நகரில் ஒரே நாளில் 120 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது. இந்தளவிற்கு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. 150 ஆண்டுகளில் இது முதற் தடவையென அந் நாட்டு வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பலத்த மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மரங்கள் வேரோடு சாய்த மையால் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் மின் சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.



கம்போடிய அரசியற் தலைவர் இளவரசர் நோறொடொறணடிற் போணோம் பெஞ்சில் பாராளுமன்றக்கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடையில் பேசுகின்றார்.

## ஜோர்ஜியா பிரதமர் சுதாய்வானியா மர்ம மரணம் முதற் கட்ட விசாரணையில் அதிர்ச்சித்தகவல்

(திலிசி)

ஜோர்ஜியா நாட்டுப் பிரதமர் மாமமான முறையில் மரணம் அடைந்தார். விஷபுகையில் சிக்கி வீட்டில் பிணமாகக்கிடந்தார்.

ஜோர்ஜியா நாட்டுப் பிரதமர் சுதாய்வானியா (41 வயது) அந்த நாட்டில் பொருளாதார சீர்த்திருத்தங்களை செய்து அனைத்து மக்களாலும் மதிக்கப்பட்டவர்.

திலிசி நகரில் புறநகர் பகுதியிலுள்ள வீட்டில் ஸ்வானியா பிணமாகக்கிடந்ததை அவரது பாதுகாப்பு அதிகாரிகள் கண்டு பிடித்தனர். ஒரு மேசை மீது உடல்கிடந்தது.

அந்த வீட்டின் மற்றொரு அறையில் அதிகாரி ஒருவர் பிணமாகக் கிடந்தார். பிரதமரின் சாவு மர்மமாக இருந்தாலும் அது இயற்கையான மரணம்தான் சதி எதுவும் இல்லை என்று ஜோர்ஜியா நாட்டு உள்துறை அமைச்சர் வானோ கூறினார்.

அந்த வீட்டில் கார்பன் புகையை வெளியே அனுப்பும் குழா யில் கசிவு ஏற்பட்டதால் வீட்டுக்குள் புகை பரவி அதில் பிரதமர் சிக்கி திக்குமுக்காடி மூச்சுத்திணறி செத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது உடலில் கார்பன் வாயுப் புகை இருந்ததற்கான அறிகுறிகள் முதல் கட்ட விசாரணையில் தெரியவந்தது. ஆனாலும் பிரதமர் மரணம் பற்றி கிரிமினல் விசாரண நடக்கும் என்று அரசு வக்கீல் கூறினார்.

## முஷாரப்பின் அனுபவங்கள் புத்தகமாக வெளிவருகின்றது

பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் தன் வாழ்க்கை அனுபவங்களைப் புத்தகமாக எழுதி இருக்கிறார். அதை வெளியிடும் உரிமையை அமெரிக்க கம்பெனிக்கு விற்றிருக்கிறார்.

பிரிபிரஸ் - சைமன் அண்ட் சுச்சு ஸ்டர் நிறுவனம் இதை உலகளவில் வெளியிடும் உரிமையை வாங்கியுள்ளது. எவ்வளவு தொகைக்கு அது வாங்கப்பட்டது என்பது தெரியவில்லை. இந்தப் புத்தகம் 2006ஆம் ஆண்டு விற்பனைக்கு கிடைக்கும் என்று பிரிபிரஸ் துணைத் தலைவரும், மூத்த ஆசிரியருமான புரூஸ் நிக்கோல்ஸ் தெரிவித்தார்.

# 2005 ஆம் ஆண்டுக்கான புனரமைப்புத்திட்டம்

# சுனாமி பாதிப்பை அடிப்படையாக வைத்தே தயாரிக்கப்படும்

நிகொட் அமைப்பின் வடகிழக்கிற்கான பணிப்பாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

**இலங்கையில் நிகொட் அமைப்பின் 2005ஆம்ஆண்டுக்கான புனரமைபபுத்திட்டம் சுனாமி பாதிப்பை அடிப்படையாக வைத்தே தயாரிக்கப்படவுள்ளது என முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த நிகொட் அமைப்பின் வடக்குகிழக்கு மாகாணத்திற்கான பணிப்பாளர் லங்காநேசன் தெரிவித்துள்ளார்.**

நிகொட் நிறுவனப் பணிப்பாளர் லங்காநேசன் கடந்த வாரம் சுனாமியால் அழிந்த முல்லைத தீவினை இரண்டாவது தடவையாக பார்வையிட்டதுடன் தனது முல்லைத தீவு பணிமனைப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார். அவரிடம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவின அபிவிருத்திப் பணிக்கு பெரிதும் உதவிய நிகொட் நிறுவனம் 2004 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்படாமலும் ஆரம்பிக்கப்படாமலும் இருக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக அதன் செயற்பாடு எப்படி இருக்கப் போகின்றது என்று கேட்டதற்கு, இதுவிடயமாக இங்குள்ள அரச அதிகாரிகளுடனும தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசையுடனும் கலந்துரையாடி தமது திட்டத்தினை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லலாம் என முடிவெடுக்க முடியும் என்றார். நிகொட் நிறுவனத்தால் அமைத்துக் கொடுத்திருந்த முல்லைத்தீவு மகாவித்தியாலயம், கள்ளப்பாடு அ.த.க பாடசாலை சுனாமியினால் அழிந்துள்ளன. அப்பாடசாலைகளை மீளவும் கட்டிக் கொடுப்பீர்களா? எனக் கேட்டதற்கு

எம்மால் முல்லைத்தீவில் அமைத்து கொடுத்த அழிந்த அனைத்து கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் அமைத்துக் கொடுக்கப்படும். அத்துடன் மேலும் பல முக்கிய உதவிகளை வழங்கத் தயாராக உள்ளோம் என்றார்.

நிகொட் நிறுவனம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை எவ்வகையில் செய்ய உள்ளது? எனக் கேட்டதற்கு

இதற்கான பதிலினை நான் எதிர்வரும் 10-ஆம் திகதி கூறுவேன் எமது நிறுவனத்தால் முடிந்த அவசர உதவிகள் செய்யத்தயார். சம்பந்தப் பட்டவர்கள் கோருமிடத்தில் உடனடியாக செய்ய முடியும் என்றார்.

2005 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம் என்ன? முன்னைய திட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைகள் எந்த அளவில் உள்ளன? எனக் கேட்டபோது.

2005 ஆம் ஆண்டு புதிய திட்டம் சுனாமி பாதிப்பினை அடிப்படையாக வைத்தே தயாரிக்கப்படவுள்ளது. சென்ற வருடங்களில் தொடர்ந்து நடைபெறுகின்ற திட்டங்கள் கார்ப் திட்டத்தின் நிதி உதவியுடன் சுனாமி பாதிக்காத இடங்களில் முல்லை மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றது என்றார்.

தங்கள் முல்லைத்தீவு பணிமனைப் பணியாளர்கள் பலர் சுனாமியால் அடித்து செல்லப்பட்டு உயிர் தப்பியுள்ளதாக அறிகின்றேன். இவர்களுக்கு அரசு வழங்குவது போன்று ஏதாவது உதவிகள் வழங்க உள்ளீர்களா? எனக் கேட்டதற்கு

எங்களுடைய நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் வருட அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள் இதனால் அரசாங்கம வழங்குவது போன்று வழங்க முடியாது. இருந்தாலும் ஓரளவு உதவி வழங்க முயற்சி எடுத்து வருகின்றோம் என்றார். தொடர்ந்து தெரிவிக்கையில், திட்டங்கள் செயற்படுத்துவதில் பல கஷ்ரங்களை கடந்த காலங்களில் சந்தித்து பல வேலைத் திட்டங்கள் கால அவகாசங்கள் நீடித்ததினால் பல சிரமங்களை எதிர் கொண்டதாகவும்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேள்வி கோரும் போது அதிகவிலை கோருகின்றனர். இந்த மாவட்டம் வளர்ச்சி அடைய வேண்டுமானால் கூறுவிலையை சரியான முறையில் எடுக்க வேண்டும். அத்துடன் பல நாடுகள் சுனாமியினால் அழிந்த நகரை மீளக்கட்டியெழுப்ப நிதி தரும் போது சரியான முறையில் கட்டி யெழுப்பக் கூடிய அதிதிறமை வாய்ந்த ஒப்பந்தக்காரர் தேவை என்றார். அத்துடன் பாடசாலை ஆரம்பமாவதற்கு மாணவர்கள் கல்வி கற்பதற்கான தளபாடங்கள் ஓரிரு மாதங்களில் வழங்க உள்ளதாகவும், பாடசாலைகள் அமைக்கப்படவுள்ள இடங்களில் தற்காலிக கொட்டகையும் அமைத்து கொடுக்க உள்ளதாகவும், இரண்டு மாதங்களுக்கொரு தடவை நாம் திட்டங்கள் தயார் செய்து கொண்டே இருப்போம். எனவே முல்லைத் தீவினை மீளக்கட்டியெழுப்ப எமது நிகொட் நிறுவனத்தால் உதவுவோம் எனத் தெரிவித்தார். (20)



முல்லைத்தீவுப் பகுதியில் சுனாமி பேரனர்த்தத்தால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களைத் தற்காலிகமாக குடியமர்த்துவதற்கென இடைத்தங்கல் முகாம்களில் அமைக்கப்பட்டு வரும் வீடுகளைப் படத்தில் காணலாம்.



இடைத்தங்கல் முகாம்களில் உள்ள தண்ணீர் தாங்கிகளுக்கு நன்னீரை வழங்குவதற்கு அவ்விடத்தில் உள்ள உவர் நீரினைப் பெற்று நன்னீராக்கும் பொறிமுறை ஒன்று வட்டுவாகல் பகுதியில் அமைக்கப் பட்டிருப்பதை படத்தில் காணலாம். (படம் வரன், சசி)

## பேருந்துத் தரிப்பிடமில்லை பயணிகள் அசௌகரியம்

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் பகுதியில் பேருந்துத்தரிப்பிடமில்லை. பயணிகள் அசௌகரியங்களிற்குள்ளாகி வருகின்றனர். மாங்குளத்திலிருந்து கிளிநொச்சி, மல்லாவி, முல்லைத் தீவு, புளியங்குளம் ஆகிய நான்கு பகுதிகளுக்கும் செல்லும் பயணிகள் பேருந்துத் தரிப்பிடம் இப்பகுதிகளில் இன்மையால் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். (05)

# நெல் அறுவடை செய்து சூடடிக்கும்

# இலகு முறை நவீன பொறி கிளி.இல் அறிமுகம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வேளாண் அறுவடை மற்றும் சூடடிப்புக்கு இலகு முறையிலான நவீனபொறி அறிமுக விழாவும், அறுவடை மற்றும் செயல்முறை விளக்கமும் நேற்று முன்தினம் நடைபெற்றது.







கிளிநொச்சி கரடிப்போக்கு கந்தையா கமத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி அரசஅதிபர் தி.இராசநாயகம் கலந்து கொண்டு அறுவடை, சூடடிப்பு இலகுமுறை நவீன பொறியின் செயற்பாட்டினை ஆரம்பித்து வைத்தார். வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவன பொது முகாமையாளர் புவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பெருந்திரளான விவசாயிகள் கலந்து கொண்டு நவீன பொறியின் செயற்பாட்டினைப் பார்வையிட்டனர்.

வேளாண் செய்கையாளர்கள் எதிர்கொண்டு வரும் நெல் அறுவண்ட மற்றும் சூடடிப்பு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனத்தினால் அறிமுகம் செய்து வைக்கப்பெற்றுள்ள மேற்படி நவீன பொறியின் செயற்பாடுகள் அதன் நன்மைகள் குறித்து தமிழீழ வைப்பக மேலாளர் மற்றும் வேளாண் நிறுவன அதிகாரிகள் விளக்கவுரை நிகழ்த்தினர்.

விவசாயத் திணைக்கள மற்றும் விவசாயத் துறைசார் நிறுவனத்தினர் மேற்படி நிகழ்வில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# முல்லை பாடசாலை மாணவருக்கு சுகாதார பரிசோதனைக்கு ஏற்பாடு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தினரின் ஒழுங்குபடுத்தலில் முல்லைமாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான சுகாதாரப் பரிசோதனை எதிர்வரும் 07.ஆம் திகதி தொடக்கம் 10.ஆம் திகதி வரை நடைபெற உள்ளதாக பட்டதாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

மாவட்டத்திலுள்ள 8733 மாணவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படவுள்ளதாகவும்

இதில் பற்சுகாதாரம், இருதய நோய்,கண்நோய் சுவாசநோய்கள் காது, மூக்கு, தொண்டை ஆகிய நோய்கள் தொடர்பான சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. மேலதிக சிகிச்சை தேவைப்படும் இடத்து வைத்தியர்களை அழைத்து வழங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதில் யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்திய நிபுணர்கள், மருத்துவபீட மாணவர்கள் ஆகியோர் சிகிச்சை வழங்குவார்கள் எனவும், ஒழுங்குபடுத்தலில் பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், மாவட்ட வைத்திய அதிகாரி, தமிழீழ சுகாதார சேவை, கல்வித்திணைக்களம், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியோர் முக்கிய பங்களிப்புக்களை செய்யவுள்ளதாகவும் பட்டதாரி சங்கத்தினர் தெரிவித்தனர். (20)

## பாதிக்கப்பட்ட க.பொ.த.உ.த.மாணவர் 50 பேருக்கு ஈருருளிகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட க.பொ.த.உ.த. மாணவர்களுக்கு தமிழீழ கல்விக்கழகத்தின் அனுசரணையுடன் ஈருருளிகள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் அல்பிறட் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா, ஜி.ரி.சற் செயற்திட்ட அதிகாரி டாக்டர் கேர்த், சுந்தரம் டிவகலாலா, கந்தசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இம் மாணவர்களுக்கான 50 ஈருருளிகளை ஜி.ரி.சற், நிறுவன அதிகாரி டாக்டர் கேர்த் ஜேர்மன் வாழ் மக்கள் சார்பாக வழங்கி உதவியமை குறிப்பிடத்தக்கது. (20,08)

# சாவகச்சேரி பிரதம தபால் நிலையம் புனரமைக்கப்பட்டும் பயனெதுவும் இல்லை!

## -அடிப்படை வசதிகளை வழங்க அஞ்சல் அத்தியட்சகர் தயக்கம்

(தென்மராட்சி)

**அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமையால் தென்மராட்சியின் பிரதான தபால் நிலையம் இயங்குவதில் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகரின் அசமந்தப் போக்கினால் தென்மராட்சிப் பிரதேசம் பாதிக்கப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளனர்.**

கடந்த ஆண்டு 40 இலட்சத்திற்கு மேல் செலவு செய்யப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட தென்மராட்சியின் பிரதான தபால் நிலையமான சாவகச்சேரி தபால் நிலையம்-மக்களின் அடிப்படை பயன்பாட்டிற்கு எந்தவொரு வசதியும் அற்ற நிலையில் இயங்கி வருவதாகத் தெரியவருகிறது.

பொதிகளை அனுப்புவதற்கு வசதிகள் அற்ற நிலையிலும் தொலைநகல், பொது தொலைபேசி வசதிகள் ஏதும் அற்ற நிலையில் புதிய கட்டடங்களும் கண்ணாடி அறைகளுடனும் காட்சியளிக்கிறதே ஒழிய இதற்கென கண்ணாடி அமைப்புக்களை கொண்ட அறைகள் அமைக்கப்பட்டும் இன்று வரை இந்த வசதிகள் எதனையும் இப்பிரதேச மக்கள் நுகர முடியாதவர்களாயிருந்து வருவதாக தெரிய வருகிறது.

கட்டடங்கள் கட்டி திறந்து வைக்கப்பட்ட பொழுது கொடுத்த வ்ாக்குறுதிகள் எதனையும் அதிகாரிகள் நிறைவேற்றி வைக்கவில்லை என்றும் இக் குறைபாடுகள், மக்கள் தேவைக்குரிய பொதிகள் அனுப்பும் வசதிகள், தொலைநகல், மற்றும் பொது மக்கள் பாவனைக்குரிய தொலைபேசி வசதிகள் எவையும் இதுவரை இத்தலைமை தபால் நிலையத்திற்கு செய்து தரப்படாமை குறித்து பொதுமக்களாலும் இன்னும் பல தரப்புக்களாலும் யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டும் இதுவரை நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்றும், அஞ்சலக அதிகாரிகளின் அசட்டையினால் தென்மராட்சிப் பிரதேசமே பாதிக்கப்பட்டு வருவதுடன், இப்பிரதேச மக்களின் அடிப்படை நலன்களும் உரிமைகளும் பெரும் பாதிப்பை சந்தித்திருப்பதாக இப்பிரதேச மக்கள் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளனர். (28)

## முன்பள்ளிச் சிறார்களின் மனநிலை படையினர் நடவடிக்கையால் பாதிப்பு

(தென்மராட்சி)

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் அருகில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினர் பாடசாலை நடைபெறும் வேளைகளில் அருகிலுள்ள பாடசாலையின் மைதானத்தில் பெரும் சத்தம் இட்டு பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்து வருவதாக தெரியவருகிறது.

அதிகளவான பாதிப்பை மைதானத்திற்கு அருகில் உள்ள முன்பள்ளி மாணவர்களே சந்தித்து வருவதாகவும், இதனால் சிறார்கள் உளவியல் ரீதியான பாதிப்பையும், பயத்தையும் எதிர்நோக்குவதாகவும் தெரிய வருகிறது. இது குறித்து தமது பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுவதாக பெற்றோர்கள் கவலையடைந்துள்ளனர். (28)

## துர்க்காபுரம் மகளிர் இல்ல 23ஆவது ஆண்டு நிறைவு விழா

(நல்லூர்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 23ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஸ்ரீதுர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெறவுள்ளது. ஆசியுரைகளை துர்க்காதேவி ஆலயபிரதமகுரு இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீனகுருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் ஓய்வுபெற்ற அதிபர் செல்வி சி.கெங்காமலர்தேவியும் வழங்கவுள்ளனர்.முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி. கலைவாணி இராமநாதனும், சிறப்புவிருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் அ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் கலந்துகொள்ளவுள்ளனர். மகளிர் இல்ல மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம பெறவுள்ளன. (41)

## வரணியில் இளைஞர்கள் சிலரின் அடாவடித்தனங்களை தடுத்து நிறுத்துமாறு பிரதேச அரசியல்துறையில் முறைப்பாடு

(தென்மராட்சி)

வரணியில் பாடசாலைக்குச் செல்லும் மற்றும் பாடசாலைவிட்டு வீடுசெல்லும் மாணவிகள் மீது சில இளைஞர்கள் குழுக்கள் சேட்டை விட்டு வருவதாகத் தெரியவருகிறது. பின்னால் சென்று பாட்டுப் பாடி கேலிசெய்வதுடன் இன்னும் சில அடாவடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவது குறித்தும் இந்த அநாகரிகமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இளைஞர்களைக் கட்டுப்படுத்துமாறு கோரி, இப் பகுதி மக்கள் தென்மராட்சி கோட்ட அரசியல்துறைப் பணிமனையில் முறைப்பாடு செய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த இப்பகுதி மக்கள், இளைஞர்கள் தங்களுடைய சகோதரர்கள் உறவினர்கள் வெளிநாட்டில் இருந்து கஷ்டப்பட்டு அனுப்புகின்ற பணத்தை கொண்டு, சீரான வாழ்க்கை முறையை வாழாமல் புதிய மோட்டார் சைக்கிள்களில், சினிமாப்படங்களில் வருகின்ற கதாநாயகர்கள் போல தலைமுடிகளை தாறுமாறாய் சிரைத்தும், கழுத்தில் பெரிய இருப்புச்சங்கிலிகளை அணிந்தும், நாகரிகம் அற்ற விதங்களில் உடை களை அணிந்தும் சிகரட் ,மது என மயக்கமான வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களாலேயே இன்று இக்கலாச்சாரச் சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகவும் இதனை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும எனவும் மக்கள் கோரியுள்ளனர்.(28)

## வரணி மகாவித்தியாலய கல்வி செயற்பாடுகளுக்கு உதவக் கோரல்

(தென்மராட்சி)

வரணி மகாவித்தியாலயத்தின் மூன்றுகட்டடங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டோரின் நலன்புரிநிலையங்களாக செயற்பட்டு வருவதால் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைந்துள்ளது.

இதனால் நான்கு வகுப்புக்கள் அருகில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே இடப்பற்றாக்குறையாலும் தளபாடப்பற்றாக் குறையாலும் பாரிய சிக்கலை தாம் எதிர் கொண்டு வருவதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார். 850 மாணவர்கள் கல்விபயிலும், இப் பாடசாலையில் மாணவர்களின் கல்வியும், சுகாதாரம் சம்பந்தப்பட்ட விடயங்களும் தற்பொழுது பாரியப்பிரச்சினையாக உள்ளதால் இங்கு தங்கவைக்கப்பட்ட மக்களை உடனடியாக தற்காலிகக் குடியிருப்புக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமைத்து இம்மக்களை குடியமர்த்தவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வரணி மகாவித்தியாலயத்தில் மட்டுமே தற்பொழுது 45 குடும்பங்களைச் சேர்ந்த 217 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (28)

## நொராட் திட்டத்தின் ஊடாக யாழ்.இல் 15 குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் "நொராட்" திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அடங்கும் கீழ்க்கண்ட பதினைந்து குளங்களின புனரமைப்பு வேலைத்திட்டங்கள் தற்போது மாநகரசபையினரின் அனுசரணையுடன் முன்னெடுக்கப் படுகின்றன.

நெடுங்குளம், வண்ணான் குளம், உப்புகுளம், பால்குளம், மறவகுளம், மூண்டுகுளம், தேவரி குளம், புல்லுகுளம், கன்னாதிட்டி குளம், கற்குளம், நாச்சிமார் கோவில் குளம், ஆரியகுளம், பிரமணாகட்டு குளம், நீர்நொச்சி தாழ்வு குளம், நரியன்குளம். ஆகிய குளங்களுக்கென யாழ்ப்பாண செயலகத்தில் நீர்வள சூழலியல் பாதுகாப்புத்திட்ட அலுவலகம் ஒன்று அரச அதிபரின் நேரடி மேற்பார்வையில் அமைந்துள்ளது.

இதனை விட மேற்படி திட்டத்தின் கீழ் காக்கைத்தீவில் கூட்டெருத்தயாரிக்கும் பரீட்சார்த்த ஆலை ஒன்றும் அதற்கான நிர்வாக அலுக் கட்டடம் ஒன்றும் அமைக்கும் ஏற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நிர்வாக அலகுக் கட்டடம் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. இத்துடன் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள 18கி.மீ. நீளமுள்ள மேற்படி குளங்களின் வாய்க்கால்களையும் புனரமைப்பதற்குமாக முற்பணமாக ஒரு கோடி ரூபா யாழ்.மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டும் மேலும் பின்வரும் பத்துக் குளங்களையும் அவற்றின் வாய்க்கால்களையும் யாழ்ப்பாண மாநகரசபையின் அனுசரணையுடன் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

பண்டாரகுளம், மக்கியாகுளம், நாயன்மார்க்கட்டு குளம், இலந்தை குளம், சின்னகுளம், வண்ணான் குளம், பிரப்பன்குளம், பிள்ளையார் கோவில் குளம், வீரமாகாளி அம்மன் கோவில் குளம். இத்திட்டங்களிற்கான நிதி முழுவதும் நோர்வே நாட்டினால் வழங்கப்பட்டுள்ளதென நொராட்"திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (36)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் விண்ணப்பிக்குக!

(நல்லூர்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுச் சென்றவர்களின் குடும்பங்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் உதவிகளைச் செய்யவுள்ளது. இதற்கான அறிவுறுத்தலை சிறிலங்கா வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகம் வெளியிட்டுள்ளது.வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், பணிப்பாளர் அனைத்து பரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கும சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.இதில் வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றவர்களின் குடும்பங்களின் தற்போதைய சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பு மற்றும், தற்போது அவர்கள் தங்கியுள்ள இடத்தின் விபரம் என்பவற்றை உடன் அனுப்பி வைக்கும் படியும் வேண்டப்பட்டுள்ளது. (41)

## கச்சாய் சந்தியில் நிலைகொண்டுள்ள படையினர் பொதுமக்கள் மீது அச்சுறுத்தல்

(தென்மராட்சி)

கச்சாய்ச் சந்தியில்நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் இப்பகுதியூடாகச் செல்லும் பொதுமக்களை தேவையற்ற முறையில் விசாரணை என்ற போர்வையில் அழைத்து அச்சுறுத்தி வருவதாக தெரியவருகிறது.

மற்றும் இப்பிரதேசத்தில் உள்ள வீடுகள் சிலவற்றைக் குறிவைத்தும் வீட்டில் உள்ளவர்களை மிரட்டி வருவதாகவும் தெரியவருகிது.வன்னிப்பகுதியில் இருந்து மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களை அச்சுறுத்தும் விதமாய் படையினரின் செயற்பாடுகள் அமைந்துளளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்தசில தினங்களுக்கு முன்னால் வெளியிடத்திலிருந்து தனது சொந்த வீட்டிற்கு வந்த இரண்டு இளைஞர்கள் சந்தியிலுள்ள படை நிலையில் வைத்து நீண்டநேரம் விசாரிக்கப்பட்டதாகவும், அரை மணித்தியாலத்திற்குப்பிறகே அவர்கள் செல்வதற்குப் படையினர் அனுமதித்ததாகவும தெரியவருகிறது. (28)

## யாழ். கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்குரிய கயிற்றுப்பாய்கள் இராணுவத்தால் கையாடல்

(நல்லூர்)

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் யாழ். மாவட்ட கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் ச்சபைக்கு எட்டுக் கயிற்றுப் பாய்கள் வழங்கப்பட்டன.

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் வழங்கப்பட்ட இக்கயிற்றுப் பாய்களை தம்புள்ளையில் இருந்து எடுத்து வருவதில் யாழ். மாவட்ட கிரிக்கெட சபையினர் காலதாமதம் ஏற்படுத்தியமையினால் அதில் ஒரு பகுதியை யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் எடுத்துவந்து குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு கையளித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்துடன் நட்பு ரீதியான கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளும் பாடசாலைகளுக்கு இவை வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனால் கழகங்கள் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட கிரிக்கெட்சபை அங்கத்துவ விளையாட்டுக் கழகங்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலைகளுக்குக் கயிற்றுப் பாய்களை இராணுவம் வழங்கியதை யாழ். மாவட்ட கிரிக்கெட் சபையின் உயர்பதவிகளில் உள்ளவர்கள் அங்கீகரித்து கையொப்பம் இட்டுக்கொடுத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஏனைய மிகுதியான கயிற்றுப் பாய்களை எடுத்து வருவதற்கான நடவடிக்கையை யாழ்.மாவட்ட கிரிக்கெட்சபையினர் மேற்கொண்டுள்ளனர். (41)


## மெய்வல்லுனர் போட்டி


ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அதிபர் செ.சிவநடராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. உடுவில் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் முதன்மை விருந்தினராகவும், வலிதெற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் செல்வி த.மஞ்சுளாதேவி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# இயற்கை அனர்த்தங்களுக்கு — புவியின் வெப்பநிலை அதிகரிப்பே காரணம்

நாம் வாழும் இப்புவி வெப்பம் அடைந்து வருவதுபற்றி அவ்வப்போது பேசக் கேட்டிருக்கின்றோம். அதனால் அது பற்றி அடிக்கடி கவனம் வேண்டுமா என்பதை சிந்திக்க வேண்டியிருக்கும். தற்போது உலகில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களுக்கு இந்த அதிகரித்து வரும் வெப்பமே காரணம் என்று கருதப்படுவதால் புவி வெப்பமடைதல் தொடர்பாக பல ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகளின் அறிக்கை நம்மை கவலையடைய வைக்கின்றன.







கடந்த வாரம் இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின் படி புவியின் வெப்பம் மேலும் 11பாகை செல்சியஸ் அதிகரிக்கக் கூடும் என தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இவ்வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் காபனீரொட்சைட்டின் அளவும் அதிகரித்துச் செல்வதாக அறிவிக்கப்படுகிறது. உலகெங்கிலும் உள்ள 95 ஆய்வுக் குழுக்கள் இணைந்து பிரிட்டனில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் குறைந்தது 2 முதல் 11 பாகை செல்சியஸ் வெப்பம் அதிகரிக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. எனினும் இந்தக் காலப்பகுதியில் புவியில் கிடைக்கும் காபனீரொட்சைட்டின் அளவிலேயே இது தங்கியிருக்கின்றது. இதற்கு முன்பு நடத்தப்பட்ட ஆய்வுகளின் படி 1.5 முதல் 5பாகை செல்சியஸ் வெப்பமே அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டிருப்பினும் அண்மைய ஆய்வுகளின் படி அது இரு மடங்காகலாம் என தெரியவந்துள்ளது. அதனால் கடல் மட்டம் 1 மீற்றர் உயரும் என்றிருந்தது. தற்போது 2.மீற்றர்கள் உயரலாம் என கூறப்படுகிறது. இந்த ஆய்வுகளின் முடிவினால் நாம் தீவிரமாக செயற்பட வேண்டியிருப்பதாகவும். இவ்வளவு காலம் எண்ணியிருந்ததை விட வேகமாக வெப்பம் அதிகரித்து வருவதால் அதனைக் கட்டுப்படுத்தும் பாதுகாப்பான வாயு மண்டலம் ஒன்று இருக்கின்றதா என்பதைக் கூற முடியாதிருப்பதாகவும் ஆய்வுக் குழுவின் தலைமை விஞ்ஞானியான டேவிட் ஸ்டென்போட் தெரிவிக்கிறார்.

வாயுமண்டலத்திலுள்ள வாயுக்களில் காபனீரொட்சைட்டின் அளவு ஒரு மில்லியனில் 400 பங்காகுமிடத்து நிலைமை மேலும் மோசமடையும் எனவும் அது தற்போது 378 பங்காக இருப்பதாகவும் ஆய்வு தெரிவிக்கின்றது. தற்போது வருடம் ஒன்றுக்கு 2பங்கு அதிகரிப்பதாகவும் ஆயினும் தொழிநுட்பமயமாக்கலை குறைப்பதன் மூலம் அதிகரிப்பை தடுக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் தற்போதைய வேகத்தில் அது அதிகரிக்குமாயின் 2015 ஆம் ஆண்டளவில் குறிப்பிடத்தக்களவில் புவி வெப்பமடையும்.

இந்த ஆய்வு புவியில் உள்ள காபனீரொட்சைட் தொடர்பாகவே நடத்தப்பட்டுள்ளது. இதன்படி இயற்கைக் காரணிகளால் அன்றி மனித நடவடிக்கைகள் காரணமாகவே புவி வெப்பமடைதல் அதிகரிப்பதாக தெரியவந்துள்ளது.

புவிவெப்பமடைதல் 2பாகை செல்சியசினால் அதிகரித்துச் செல்வதே பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என நம்பலாம் -தொழில் நுட்பப் புரட்சிக்கு முன்னர் இருந்ததை விட 2 பாகை செல்சியஸ் அதிகரிக்குமாயின் உலகில் வரட்சி, விளைநிலங்கள் பாதிப்புறுதல், சுகாதாரக் கேடுகள் என்பன ஏற்பட வாய்ப்புகள் உண்டு. அத்துடன் கடல் வாழ் கோறல் தாவரங்கள் அழிவுக்குட்படுவதுடன் அமேசன் மழைக்காடுகளும் அழிவுறும்.

இதிலிருந்து பழையநிலைஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவாகும் என்பதுடன் பல பனி மலைகள் உருகி திரவ நிராகி கடலில் கலப்பதும் கடல் மட்டம் அதிகரிக்கக் காரணமாகும். அதனுள் சிறு சிறு தீவுகள் கடலுள் அமிழும்.

இதைவிட தற்போது ஆர்டிக் சமுத்திரத்தில் சேரும் நன்னீரின் அளவும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. புவியின் அதிகரித்த வெப்பம் காரணமாக முனைவுப் பகுதி அதாவது வட அமெரிக்க நாடுகள் துந்திரா பாலைநிலக்கால நிலையை அடைந்து வரும் அதேவேளை சில ஐரோப்பிய நாடுகளின் காலநிலையிலும் மாற்றம் ஏற்படுகின்றமை புவியின் அதிகரித்த வெப்பம் நிலையைத் தெளிவுபடுத்துகின்றது.


இந்த அதிகரித்து வரும் வெப்பம் காரணமாக ஆசிய ஆபிரிக்க நாடுகளே அதிகம் பாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் கடல் மட்டம் அதிகரிப்பதும் புவி நடுக்கங்கள் ஏற்படுவதும் சாதாரண நிகழ்வாகி விடலாம் என்றும் மேற்படி ஆய்வுகளின் மூலம் தெரிய வருகிறது. ஆகவே புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்துவது மனித நடவடிக்கைகளிலேயே தங்கியிருப்பதாகவும் விஞ்ஞானிகள் குழு தெரிவிக்கின்றது.

## தொட்டிலைத் தெரிவு செய்ய — சிங்கப்பூர் நிபுணர்களின் ஆலோசனை

கைக்குழந்தைகளையுடைய தாய்மார்கள் அதிக வீட்டு வேலைப் பளுவினால் சற்று நேரத்துக்காவது தனது குழந்தையை தொட்டிலில் கிடத்தும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். தவழ்ந்து திரிகின்ற குழந்தையை மறைப்புக்களைக் கொண்ட கட்டிலில் அல்லது மரத் தொட்டிலில் கிடத்தும் போது தாய்மார் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். குழந்தைகளுக்காக தொட்டில் ஒன்றை வாங்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் பலவற்றை சிங்கப்பூர் சுகாதாரப்பாதுகாப்பு சபை நிபுணர்கள் குழு சிபார்சு செய்துள்ளது . வாங்கப்படும் தொட்டில் குழந்தையின் வயது, அமைப்பு ஆகியவற்றுக்கு ஏற்றதா என சிந்திக்க வேண்டும் 9 மாதக் குழந்தைகள் காலை ஊன்றி நிற்கும் போது 11-12 மாதக் குழந்தை நடந்து திரிய தொடங்கும்.

அவ்வாறான குழந்தைகளுக்கு பலமான சட்டங்களினால் ஆன உறுதியான விசாலமான கட்டில் தேவைப்படும். அன்றியும் நடமாடும் குழந்தையின் எடைக் கேற்றவாறு தொட்டிலின் எடை இல்லாது போனால் பிள்ளை தொட்டிலோடு சரிந்து விழலாம். அதே போன்று இருபக்க ஆதாரங்களோடு கூடிய தொட்டிலாயின் தொட்டிலின் கால்கள் 50 சென்ரி மீற்றர் உயரத்துக்கு மேல் அமைத்தல் வேண்டும் அத்துடன் தொட்டிலின் சட்டங்களின் இடைவெளி 5முதல் 5.8 சென்ரி மீற்றராக இருக்க வேண்டும். அவை குழந்தைக்கு புலப்படாதவாறு மறைத்து வைக்க வேண்டும். தொட்டிலுக்குள் வைக்கும் குழந்தையின் விளையாட்டுப் பொருட்கள் சிறியனவாக இருப்பது நன்று அவை உருவத்தில் பெரிதாயின் அவற்றின் மீது ஏறி குழந்தை கீழே விழுந்து விட ஏதுவாகும்.

## கால்கள் ஒட்டிப் பிறந்த குழந்தை



பெருநாட்டில் லிமாநகர் மருத்துவமனையில் 9 மாத பெண் குழந்தை உள்ளது. இதன் 2 கால்களும் ஒட்டிப் பிறந்துள்ளது. இதன் பெயர் மிலாகுரோய் செர்ரான். இதன் கால்களைப் பிரிக்க இந்த மாதம் அறுவைச் சிகிச்சை நடக்கவுள்ளது. இந்த அறுவைச் சிகிச்சை ஆபத்தானது என்ற கருத்தும் உள்ளது. இந்த மாதிரி கால்கள் ஒட்டிப் பிறக்கும் பிறவிகளில் லட்சத்தில் ஒன்றுதான் பிறந்து சில மணி நேரங்களைத் தாண்டி உயிர் வாழும். மற்றவை இறந்து விடும் எனக் கூறப்படுகிறது.

## உடலின் எல்லா உறுப்புக்களையும் பாதிக்க வல்லது-புகையிலை

நமது உடலின் உறுப்புக்களையும் பாதிக்கின்ற ஒரு பொருள் இருக்கிறதென்றால் அது புகையிலை தான். அதனால் வாய் உணவுக்குழாய், தொண்டை, நுரையீரல், கணையம் ஆகிய உறுப்புக்களில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய சக்தி புகையிலைக்கு உண்டு. ஆஸ்துமா சம்பந்தப்பட்ட COPD எனப்படும் ஒரு நோய்க்கு ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுத்தும்ரி.ஏ.ஓ(TAO- THROMBOANTITISOBLI TERAN) என்ற நோய்க்கும் மூலகாரணம் புகையிலை தான்.

ரி.ஏ.ஓ நோயினால் பாதிக்கப் பட்டவர்களால் கொஞ்சத் தூரம் கூட நடக்க முடியாது. அப்படியே நடத்தாலும் கால் வலிக்கிறது என்று உட்கார்ந்து விடுவார்கள். இவர்களுக்கு நோய் முற்றிவிடும் நிலையில் காலையே எடுக்கவேண்டிய பரிதாபநிலையும் ஏற்படும். இது போதாதென்று மாரடைப்பு ரத்த அழுத்தம், ரத்தக்கொதிப்பு போன்ற பேராபத்துக்களுக்கும் கூட புகையிலைதான் காரணமாகவுள்ளது.

புகைப்பதை நிறுத்தினால் நீங்கள் மட்டுமல்ல உங்களைச் சுற்றிலும உள்ளவர்களும் பயன் அடைய முடியும். புகைப்பவர்கள் இருக்கும் அறையிலோ, வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ நீண்ட காலத்துக்குக் கூட இருப்பவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். புகைப்பழக்கம் புகைப்பவர்களை 70 சதவீதம் பாதிக்கிறது என்றால் அந்தப் புகையைச் சுவாசிக்கும் ஒன்றுமறியாத அப்பாவிகள் 25 சதவீதம் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

## மாடிப்படியேறும் போட்டியில் 93 வயது தாத்தா—



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ''எம்பயர் ஸ்டேட''கட்டடம் உள்ளது. 86 மாடிகளைக் கொண்ட இந்த மிக உயரமான கட்டடத்தில் ஆண்டு தோறும் ஒரு போட்டி நடத்தப்பட்டு வரு கிறது. அந்த உயர்ந்த கட்டடத்தின் மாடிப் படிகளில் 1576 படிகளில் ஏறி முதலா வதாக வரவேண்டும் என்பதே போட்டி 28-ஆவது ஆண்டாக இந்த ஆண்டும் இந்த வினோதப் போட்டி நடந்தது. இதில் ஜெர்மனியைச் சேர்ந்த ரூடால்ப் ரீட் பெர்கர் முதலாவதாக வந்து வெற்றி பெற்றார். இதில் பெண்களுக்கும் தனியாக போட்டி நடத்தப்பட்டது.

மாடிப்படி ஏறும் இந்தப் போட்டியில் சிகோ ஸ்கிமோன் என்ற 93 வயது தாத்தா ஒருவர் கலந்து கொண்டார். அவர் கடைசியாக வந்தாலும் அனைத்துப் படிகளையும் ஏறிக் கடந்து விட்டார். ஒவ்வொரு ஆண்டும் இவர் இந்தப் போட்டியில் கலந்து கொள்வது வழக்கம். ஜெர்மனி வீரர் ரூடால்ப் ரீட்பெர்கர் முதலா வதாக வந்த காட்சியை படத்தில் காண லாம்.

## உடலின் எடையைக் குறைக்கவும் நீதிமன்று உத்தரவிடும்

பல்கேரியாவைச் சேர்ந்த செவ்டாலினா ஆர்டினோவா என்ற பெண்ணுக்காக வழக்கு விசாரணை கடந்த 6ஆண்டுகளாகத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இவர் மீது ரஸ்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஆனால் அளவுக்கு மீறிய உடல் எடை காரணமாக அவரால் நீதி மன்றுக்கு வர இயலவில்லை. அவரது உடல் எடை 480 இறாத்தல் களாகும். இந்த நிலையில் அவர் தனது வீட்டிலிருந்து வெளியே வருவதே இயலாத காரியம். எனவே அவர்தொடர்பான வழக்கு விசாரணை கடந்த 6 ஆண்டுகளாகத் தள்ளி வைக்கப்பட்டு வருகிறது. பொறுமைஇழந்த நீதிபதி உடனடியாகசெவ்டாலினா தனது உடல் எடையைக்குறைக்க வேண்டு மென்றுஉத்தரவிட்டுள்ளார்.

**நான்** வழமையாக எல்லா நாளும் தொழிலுக்குப் போறனான் அண்டைக்குத் தொழிலுக்குப் போகாமல் வீட்டில வலை சீராக்கிக் கொண்டிருந்தன்.

நான் வலை சீராக்க பிள்ளைகள் நாலும் வீட்டுக்குள்ள இருந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். என்ர அவா கிணற்ற டியில உடுப்புத்தோய்ச்சுக் கொண்டிருந்தா. அப்ப ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அந்த வெடிச்சத்தத்தோட பெரிய இரைச்ச லும் கேட்டுக் கொண்டிருந்தது. நான் அதை பொருட்படுத்தவே இல்லை. வீட்டுக்குள் இருந்த மூத்தவள் 'அப்பா என்ன கிபிர் வந்திட்டானோ" எண்டு கேட்டாள். எனக்கு போய் ஒரு வீட்டு முகட்டுக்குள் செருகிப் போட்டுது.

தலைவீட்டுக்குள்ள செருகுப்பட்டுப் போச்சுது என்னால ஒண்டுமே செய்யே லாமல் இருந்திச்சு. தலையை வெளியால எடுக்க ஏலாத மாதிரி கடலடிச்சுத் தள்ளிப் பிடிச்சுக்கொண் டிருந்திச்சு. நான் சரி என்ர கதை முடிஞ்சுது எண்டுதான் நினைச்சன். அப்படியிருக்க திடீரெண்டு வீடு இடிஞ்சு விழுந்துபோய்ச்சுது. வீடு இடிஞ்சதால் நான் தப்பிப் போட்டன். அதில இருந்து தப்பின உடன கடல் என்னை கீழே அமத்திச்சுது. நான் தத்தளிச்சுக்கொண்டுபோக ஏதோ ஒண்டு கையில ஆப்பிட்டுவிட்டது. அதைப் அழுது கொண்டிருக்க ரக்டரில பொடியள் (சடலங்கள்) வந்திச்சு. அதைப்பார்க்க எனக்கு கத்தியழ வேண்டும் போல் இருந்தது. என்னால எழும்பி நடக்க ஏலாது பின்ன எங்கட சொந்தக்காரப் பொடியன் ஒருத்தனை என்ர பிள்ளையளின்ர பொடி ஏதும் வந்திருக்கோ பார் எண்டு அனுப்பினேன். அப்படி யொண்டும் வரேல்ல எண்டு அவன் சொன்னான். உடனே நான் பொடியள் குவிச்சு விட்ட இடத்துக்கு நொண்டி நொண்டிப் போனன் அங்க எல்லாத்துக்யையும் தேடினன். என்ர ரஜீவன் குட்டி(வயது -06)கண்மூடிக்கிடந்தான. கதறியழுது கொண்டு அவனைத் தூக்கி அழுது கொண்டு வந்து ஒரு இடத்தில கிடத்திப்போட்டு மற்றப் பிள்ளையளையும் மனைவியையும் ஒவ்வொரு பொடியாப் பார்த்துக்கொண்டு வந்தன். அவையளக் காணேல்ல.

இப்படியே இருக்க பிறகும் பின்னேரம் ஐந்து மணியிருக்கும் ஒரு



இருக்கிறன். ஒவ்வொரு நாளும் காலம போய் என்ர மனிசியோடயும் மூன்று பிள்ளைய ளோடயும் இருந்திட்டு பின்னேரம் பள்ளிக் கூடத்துக்கு வந்திடு வன். என்ன செய்யிறது. இனி இதுதான் என்ர தலை யெழுத்து. தப்பினவளும் இல்லாட்டி நான் இருக்கவே தேவையில்லை. இனி என்ன செய்யிறது எந்தக் கடல்

# ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

முல்லை கடலோரத்தில் இருந்து 75 மீற்றர் தூரத்துக்குள் அமைந்துள்ள மணல்குடியிருப்பு கரையோரத்தில் உள்ள தனது வீட்டில் மனைவி பிள்ளைகளுடன் இருந்தவேளை அலை அடித்து ஒரு பிள்ளையைத் தவிர அனைவரையும் சிதைத்துவிட்ட நிலையில் தனது வீடு இருந்த இடத்தில் நான்கு சமாதிகளை அமைத்து அவற்றுடனேயே தனது பொழுதைக் கழித்துவரும் அன்ரனி அமலதாஸ் (மரியதுரை வயது 36) என்பவர் தனது துயர அனுபவத்தைப் பகிர்ந்துகொள்கிறார்.

கிபிர்மாதிரி தெரியேல்ல " சூறாவளிக்காத்து எழும்பீட்டுதாக்கும் அது தான் அடிக் கப்போகுது" எண்டு நினைச்சுக் கொண்டு எழும்ப கிணற்றடியில நிண்டு உடுப்புத் தோய்ச்சுக்கொண்டிருந்த என்ர மனுசி "இஞ்சருங்கோ அப்பா பிள்ளைகள் எங்க" எண்டு கத்தினபடி வீட்டிற்குள் ஓடிவந்தாள்.

அவள் ஓடிவந்ததும் நான் வீட்டு வாசலில் வந்து பார்த்தேன் ஒண்டுமே தெரியவில்லை. உடனடியாக பிள்ளைகளையும் மனைவியை யும் சூறாவளிக்காத்தடிச்சா முகட் டைத்தானே தூக்கும். நீங்கள் வீட்டுக்குள்ள போங்கோ எண்டு சொல்லிப் போட்டு நானும் வீட் டுக்குள்ள போய்க்கொண்டிருந்தன். ஏதோ திடீர் எண்டு திரும்பிப் பார்த்தன் கடல் கோரங் கொண்டு பெரிசா எழும்பி அடிச்சுது. எங்கட வீட்டுக்கு அங்கால மீன்பிடிப் படகுகளுக்கு டீசல் அடிச்ச மிச்ச பரலுகள் எல்லாம் கிடந்தது. அதுகள் எல்லாம் சேந்து தண்ணி யோட மேல எழும்பி வந்திச்சுது.

அதைப்பார்த்த உடனேயே நான் திகைச் சுப் போனேன். "பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வெளியால ஓடிவாப்பா கடல் பிடிச்சு மேல எழும்பி வந்தன். ஒரு பிறிச் பெட்டி(குளிர்சாதனப் பெட்டி) மிதந்து போய்க் கொண்டிருந்திச்சு. அதில கையை வைச்சன். அப்படியே மிதந் தபடி என்னையும் தள்ளிக் கொண்டு போய்ச் சுது. ஒரு கட்டத்தில அதுவும் என்ரை கையைவிட்டு விலகிப் போக பிறகும் தண்ணி என்னை மேலயும் கீழயு மாக அமத்தி எழுப்பி உருட்டிச்சுது. இப்படியே வர முல்லைத்தீவு சந்தைக் குப் பக்கத்தில இருக்கிற வாதனாளி மரத்தை எட்டிப்பிடிச்சுப்போட்டன். அதில நிண்டு என்ர பிள்ளையளையும் மனிசி யையும் நினைச்சுக் கத்திக்கொண்டிருந்தன். திடீரெண்டு கடல்தண்ணியைக் காணேல்ல. அதுக்குப் பிறகு பார்த்தால் என்ர உடல் எல்லாம் இரத் தத்தால தோய்ஞ்சுபோய்க் கிடந்திச்சுது. உடன. மரத்தால இறங்கி ரக்டரில் பொடி குவியலாய் வந்திச்சுது. உடனே எழும்பி எட்டிப் பார்த்தன். ஒரு சின்னப்பிள்ளையின்ர பொடி வந்திச்சு உடன அதுக்குப்பின்னால ஓடி போய் அது என்ர பிள்ளையா எண்டு பார்த்தன். என்ர கடைசிப் பிள்ளை தனுக்குட் டிக்கு இருக்கிற மாதிரியே நெத்தியில ஒரு சுழி இருந்திச்சு. அதைப்பார்த்தவுடனேயே அவன்தான் என்ர கடைசி எண்டு தூக்கினன். அடிக்கிள்ளையும் கடல்ல போய் மீன் கொண்டுவாறாக்கள் நாங்கள்தான். எங்களை மரணப்படை எண்டுதான் எல்லா ரும் சொல்லுற வங்கள். என்ர பிள்ளையள் மனிசி எல்லாரையும் எப்படி எப்படியோ வச்சிருக்க வேணும் எண்டு நினைச்சன். எத்தின கற்பனைக் கோட்டை எல்லாம் கட்டினன். எல்லாம் கனவாகப் போட்டுது. ஒவ்வொரு நாளும் கடல்ல இறங்கேக்க இண்டையான்

# தப்பி இருக்கிற பிள்ளைக்காகத்தான் நான் இப்பவும் உயிரோட இருக்கிறன்

பகுதி--15

பெருகுது" எண்டு சொல்லிக்கொண்டு நான் ரண்டு பிள்ளையளைப் பிடிச்சுக்கொண்டு ஓட எனக்குப்பின்னால ஒரு பிள்ளையைப் பிடிச்சுக்கொண்டு மனிசி ஓடிவந்தாள். இரண்டாவது பிள்ளை வீட்டுக்குள்ள தவறி விட்டாள் திரும்பவரமுடியாது. இருக்கிறது களையாவது காப்பாற்றுவம் எண்டு ஓடினம்.

நான் வீட்டின்ர பின் பக்கத்துக்குப் போகேல்ல கடல் வந்து என்னை அடிச்சி விழுத்திப் போட்டுது. நான் தண்ணீக்குள்ள விழேக்க " ஐயோ என்னப்பா இது என்னை ஒருக்கால்......." எண்டு அரைகுறையாக மனைவி கத்தியது மட்டும் கேட்டது. நான் நித்தமும் கேட்ட அந்தக் குரல் அன்று அரைவாசியுடன் நின்றுபோய்விட்டது.நான் தண்ணீக்குள்ள இருந்து எப்பிடியும் எழும்ப வேணும் எண்டு முயற்சிக்க என்ர பிடியில இருந்து ஒருபிள்ளை பறிபட்டுட்டுது தண் ணீக்குள்ள என்ன சுத்திக்கொண்டு போகேக் கையும் நான் விடுபட்ட பிள்ளையை எட்டிப் பிடிக்க வெளிக்கிட தண்ணி அவனை வேகமா இழுத்துப்போட்டுது.

இப்ப மனுசியும் மற்ற பிள்ளையளும் என்னமாதிரி எண்டு தெரியேல்ல. ஒரு பிள்ளை மட்டும் என்ர கையோட இருக்கி றான். நான் எப்பிடியும் மேல வரவேணும் எண்டு முயற்சித்தன். எங்கயோ போய் ஒரு சுவரோட அடிச்சிருக்க வேணும் என்ர மண்டை கலங்கிப்போட்டுது அதோட அடுத்த பிள்ளையும் விடுபட்டுட்டான்.

எனி என்ன பிள்ளையள் மனுசி எல்லா ருமே அடிபட்டுப்போச்சுதுகள் நான் மட்டும் இருந்தென்ன எண்டு நினைச் சிக்கொண்டு அவையளத் தேடிப் போக வேணுமெண்டு தண்ணியோட பலன்ஸ் பண்ணி மேல எழும்பிட்டன்.தண்ணிக்கு மேலவந்து பாத்தன் பூமியின்ஆதாரங்கள் எதுவுமே தெரிய வில்லை. எல்லாம் கடலாகத்தான் இருந்தது. அதுக்குள்ளால என்னை இழுத்துக் கொண்டு

'ஐயோ பிள்ளை யளளையும் மனிசியையும் தேடி நடந்தன்" அப்படியே நடந்துவர கடற் புலி வசந் தண்ணா வீட்டுக்குள் தவ்றி விட்ட என்ர இரண்டாவது பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வந்தார். எனக்கு உயிர் வந்தமாரி இருந்திச்சு. பிள்ளை "அப்பா அப்பா" எண்டு கதறினாள். அவளைத்தூக்கி அணைத்து ஆறுதல்கூறி பத்திரமாக வேற ஆக்களிட்டக் குடுத்திட்டு என்ர மற்றப் பிள்ளையளையும், மனிசியையும் தேடி இடுப்பளவு தண்ணிக் குள்ளால திரும்பி வந்தன்.



குடும்ப உறவினர்களின் நினைவுச் சமாதி

நான் திரும்பிவர கடல் திரும்பியும் பெருக் கெடுத்தது. எல்லாரும் கத்திக் கொண்டு ஓடினார்கள். என்னால ஓட ஏலாமல் இருந்தது. ஒரு மாதிரி திரும்பி வந்திட்டு பிறகும்போகவெளிக்கிட்டன். ஆனால் என்ர காயத்தைப் பார்த்திட்டு உடனேயே என்னை ஏற்றிக்கொண்டு முள்ளியவளைக்குக் கொண்டுபோய் மருந்து கட்டினார்கள். மருந்து கட்டினவுடன வித்தியானந்தாப் பள்ளிக்கூடத்துக்கு வந்தன். அங்க வந்து

அவன்தான் என்ர கடைசிப்பிள்ளை. தனுக் குட்டி பிறந்த உடுப்போ மேனியோனயும் தூக்கி அழுதுகொண்டு வந்து என்ர ரஜீவன்ர பொடியோட கிடத்தினன். இப்படியே ரண்டு பேரையும் எடுத்து எங்கட உறவினர்களின்ர பொடியோட சேர்த்து அடக்கம் செய்துபோட்டு மனைவியின்ரையும் மற்றப் பிள்ளை யின்ரையும் பொடியைத் தேடினன் புதுக்குடி யிருப்பில இனந்தெரியாத கனக்க பொடி கிடக்கெண்டு சொன்னாங்கள். அடுத்தநாள் காலமை வந்தன். அங்க கிடந்த பொடியள் எல்லாத்தையும் ஒவ்வொன்றாய்த் தேடிப் பார்த்தன். சொந்தக்காரர் எல்லாற்றையும் பொடி இருந்தது. எங்கட சொந்தக்காரர் மொத் தமா 148 பேர் செத்துப்போய்ச்சினம். இனி என்ன செய்யிறது. எனக்கு ஒருத்தரு மில்லை. இப்பவும் மூத்தபிள்ளையையும் மனைவியையும் தேடிஅலைஞ்சு கொண்டு தான் இருக்கிறன். இனி என்ன செய்யிறது. என்ர மனிசி பிள்ளையளை எங்கவைச்சு பறிகுடுத்தனோ அதில சமாதி கட்டிப்போட்டு

உழைப்பு சின்னவனுக்கு, மூத்தவளுக்கு, நடுவிலானுக்கு, இழையவளுக்கு,மனிசிக்கு எண்டு சொல்லித்தான் இறங்கிறனான்.

அடிக்கடி கடல்ல எத்தின நேத்தி வைச்சு உருகி உருகி தொழில் செய்து உழைச்சு ஊட்டி வளர்த்த என்ர மனுசி பிள்ளையள கடல் இப்படிக் கொண்டு போட்டுது. நான் எவ்வளவு கஸ்ரப்பட்டு என்ர பிள்ளையள வளர்த்தன். ஒரு கட்டத்தில அதுகளுக் காகத்தான் வாழ்ந்தன். ஆண்டவனுக்கு சரியாகத்தான் வளர்த்தனான் என்ர கற்பனை கனவு எல்லாத்தையும் இந்தக் கடல நம்பித்தான் கட்டினன். ஆனால் அந்தளாத்தையும் கொஞ்ச நேரத்தில வந்து மண்ணாக்கிப்போட் டுது.

இனி நான் ஆருக்காண்டி வாழுறது. எல்லாரும் போட்டினம். அந்த ஒரு பிள்ளைக்காண்டித்தான் வாழுறன். என்ர குஞ்சுகளை நான் எதில பறிகுடுத்தனோ அதிலதான் சமாதிகட்டி வைச்சிருக்கிறன். உடல் எங்கையும் கிடக்கட்டும் உயிர் இஞ்சதான் கிடக்குது. அதிலதான் சமாதி கட்டி வைச்சிருக்கிறன்.

**அ.லோகீசன்**

என்ர சின்னவன் இல்லை. அவன் தூக்கி வளர்த்த நாய்தான் இண்டைக்கு எனக்குத் துணை. அது என்னெண்டு தப்பிச்சோ தெரியாது. சின்னவன்ர சமாதிக்குப் பக்கத் தில படுத்துக்கிடக்குது. ஒரு பிள்ளையும் நாயும்தான் இனி என்ர துணை. சின்னவன் போட்டான். அவன் அன்பாய் வளர்த்த நாய் மட்டும் என்னோட நிக்குது. எனக்குத் துணை யாய் என்று தனது மனைவி பிள்ளைகளின் சமாதியை தழுவிப் புரண்டு கதறி அழுதார் அந்த மனிதர்.

சின்னாத்துப் பாலத்துக்குப் பக்கத்தில அமைந்திருந்த செந்தளிர் சிறுவர் இல்லத்தில் இருந்த மழலைகளுக்கு என்ன நடந்தது என்பதனை அடுத்த பகுதியில் தருகிறோம்.

**தொடரும்**

# பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடைவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2005.02.15ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

**பணிநிலை:-**

01) அலுவலர் (ஆண்கள்)
02) உதவி அலுவலர் (ஆண்கள்)
03) கணினித் தரவுப் பதியுநர் (இருபாலாரும்)

**கல்வித் தகைமை**

பணிநிலை 01) க.பொ.த. (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்
பணிநிலை 02) க.பொ.த. (சா/த) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேண்டும்.
பணிநிலை 03) க.பொ.த. (சா/த) பரீட்சையில் தோற்றியிருப்பதுடன், எம்.எஸ்.ஒபிஸ் கற்கைநெறி முழுமை செய்திருத்தல் வேண்டும்.

வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி - பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் :- 2005-02-23 காலை 10.00 மணிக்கு
நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :- மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

குறிப்பு :- நேர்முகத் தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

ஆளுகை
மனிதவள மேம்பாட்டுப் பகுதி

(சி-11310)

# அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## பல்கலைக்கழக அனுமதி கல்வியாண்டு - 2004/2005

2004 க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து 2004/2005 கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விவசாயம், விஞ்ஞானம், முகாமைத்துவம், வர்த்தகம், கலை, சித்தமருத்துவம், சட்டம் ஆகிய கற்கை நெறியை பயில்வதற்காகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களுக்கான பதிவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பதிவு செய்யப்படாதோரின் பெயர்ப் பட்டியல் 15.02.2005 இற்கு முன்னதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்ப வேண்டியுள்ளதால் இதுவரை பதிவினை மேற்கொள்ளாத மாணவர்கள் 10.02.2005 இற்கு முன்னதாக நேரில் வந்து தங்கள் பதிவினை யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் (அலுவலக நேரத்தில்) தவறாது மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். (தொலைபேசி-021 222 6714)

| கற்கைநெறி | பதிவு செய்யும் திகதி | விரிவுரைகள் ஆரம்பம் |
|---|---|---|
| 1. விவசாயம் | 07.02.2005 தொடக்கம் 10.02.2005 வரை | 07.02.2005 |
| 2. விஞ்ஞானம் [பௌதிகம்] | | 18.04.2005 |
| 3. விஞ்ஞானம் [உயிரியல்] | | 18.04.2005 |
| 4. வர்த்தகம் | | 14.02.2005 |
| 5. முகாமைத்துவம் | | 14.02.2005 |
| 6. கலை | | 14.02.2005 |
| 7. சித்தமருத்துவம் | ஏற்கனவே பத்திரிகையில் அறிவித்தபடி 07.02.2005 | 21.03.2005 |
| 8. சட்டம் | ஏற்கனவே பத்திரிகையில் அறிவித்தபடி 10.02.2005 | பின்னர் அறிவிக்கப்படும் |

**பதிவின் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

1. பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதியும், போட்டோப்பிரதியும்)
2. பாடசாலை விடுகைப்பத்திரம் (மூலப்பிரதியும், போட்டோப்பிரதியும்)
3. நிழற்படப் பிரதி (அளவு 2"X2 1/2") கறுப்பு வெள்ளை -08 பிரதிகள்
4. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அனுப்பப்பட்ட கடிதம்
5. தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி
6. க.பொ.த(உயர்தரம்) பெறுபேறும் அதன் "Z"ஸ்கோர் விபரமும் (மூலப்பிரதியும், போட்டோப்பிரதியும்)

**செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா 150/= | |
| ஆய்வுகூட கட்டணம் | ரூபா 300/= | [விஞ்ஞானம்/விவசாயம்/ சித்தமருத்துவம், புவியியல்] |
| வைத்தியக் கட்டணம் | ரூபா 100/= | |
| கைநூல் | ரூபா 65/= | |
| மாணவர் வழிகாட்டிநூல் | ரூபா 10/= | |

குறிப்பு:- சுனாமி அனர்த்தத்தால் மேற்படி ஆவணங்கள் ஏதாவது தவறியிருந்தால் அது தொடர்பான அவ்வப் பிரதேச கிராமசேவையாளர் மற்றும் உதவி அரசாங்க அதிபரின் உறுதிப்படுத்தற் கடிதத்தினை கொண்டு வருதல் வேண்டும்.

துணைவேந்தர்,
03.02.2005

(சி-11311)

— சுனாமி நிவாரண மோசடி —

# 100 கிராம சேவையாளர்கள் மீது லஞ்சக் குற்றச்சாட்டு!

(கொழும்பு)

சுனாமி பாதிப்பின் பின்னர் நிவாரணங்கள் தொடர்பில் லஞ்சம் பெற்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சுமார் 100 கிராமசேவகர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 17 கிராமசேவகர்களின் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்தத் தகவலை சமூக சேவைகள் பிரதி அமைச்சர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

இவர்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். ஏற்கனவே இந்தக் குற்றம் தொடர்பில் எட்டுப் பிரதேச செயலர்கள் மற்றும் மாவட்ட செயலர்கள் ஏற்கனவே தற்காலிக பதவி நீக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர். காலிப் பிரதேசத்தில் இருந்து இருவர் இடமாற்றமும் செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார். இதேவேளை அரசாங்கத்தின் நிவாரணப்பணிகளை பன்முகப்படுத்த தேசிய நடவடிக்கை மையம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு ஊடாக நிவாரணங்கள் விநியோகிக்கப்படவுள்ளதாக தேசிய நடவடிக்கை மையத்தின் தலைவி தாரா டி மெல் தெரிவித்தார். (32)

# சுனாமி நிவாரணத்திற்கு தொடர்ந்து உதவ் போவதாக கிரேக்க அரசு அறிவிப்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற நிவாரண முயற்சிகளுக்கு தொடர்ந்தும் உதவப்போவதாக கிரேக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மனிதாபிமான உதவிகளையும், போக்குவரத்து விமானங்களையும் வழங்கப்போவதாக இலங்கைக்கான கிரேக்க தூதுவர் தெரிவித்துள்ளார். அவசர அபிவிருத்தி நிதியுதவியாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் யூரோ தொகையை கொடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிரேக்கத்தைச் சேர்ந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் கிழக்கில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் திருகோணமலையில் இடம் பெயர்ந்த மக்களுக்குப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக பாரிய கப்பல் ஒன்றை அனுப்பி வைப்பதற்கு கிரேக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பலில் விசேட நிபுணர்கள் உட்பட மற்றும் மருத்துவர்களும் வேலை செய்வார்களென கூறப்பட்டுள்ளது.

*– திருமலை செல்வநாயகபுரம் பாடசாலை –*

# கற்பித்தல் செயற்பாடு பாதிக்கப்படுவதாக பெற்றோர், பாதுகாவலர் ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை செல்வநாயகபுரம் பாடசாலையில் நேற்றுமுன்தினம் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1700 வரையிலான பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள இந்தப் பாடசாலை நலன்புரி முகாமில், பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பாரிய இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாகப் பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தனியான கூடாரங்கள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாயினும் அவர்கள் வகுப்பறைகளையே பயன்படுத்துவதாகத் தெரிவிக்கும் பெற்றோர்கள், பெரும் சுகாதார சீர்கேட்டிற்குப் பாடசாலை உள்ளாகியிருப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த நிலையில் ஆசிரியர்கள், மாணவர்களை பாடசாலை செல்ல பெற்றோர் அனுமதிக்காத காரணத்தால் ஆசிரியர்கள் கல்விப் பணிமனையின் முன்பு அமர்ந்திருந்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்திப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## சுமையுந்து / இழுபொறி

## ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கான நேர்முகத்தேர்வு

தமிழீழ போக்குவரவுக் கழக சுமையுந்து, இழுபொறி ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர் முகத்தேர்வு 08.02.2005 ஆம் நாள் செவ்வாய் காலை 9.30 மணி தொடக்கம் பகல் 2.00 மணி வரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக்கழகம் நடுவப்பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.11307)

# சுனாமி தொடர்பான வதந்தியினால் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்

(சென்னை)

**தமிழகக் கடலூரில் மீண்டும் சுனாமி தாக்கும் என வதந்தி கிளம்பியதால் 50 கிராமங்களில் மக்கள் அலறி அடித்து தங்கள் இடத்தை விட்டு வெளியேறினார்கள்.**

சுனாமி கடல் பேரலைத் தாக்குதல் நடைபெற்று ஒரு மாதத்துக்கு மேலாகிறது. நிவாரணப் பணிகள் நடத்தப்பட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் சகஜ நிலைக்குத் திரும்பிவருகிறார்கள்.

அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள், பொது மக்கள் கொடுத்த நிவாரண பொருட்களாலும், கொடுக்கப்பட்ட நிதி உதவியாலும் ஓரளவுக்கு நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளனர்.

பெரும்பாலான கடலோர மீனவர்கள் படகுகளைச்சீர்செய்து கடலுக்கு மீன் பிடிக்கவும் சென்றனர். இந்த நிலையில் தேவானம் பட்டினம் கடற்கரையில் மீண்டும் சுனாமி வந்துவிட்டது. அனைவரும் தப்பி மேடான பகுதிக்குச் செல்லுங்கள் என்ற செய்தி பரப்பப்பட்டது. இந்த செய்தி யாரால், எப்படி பரவியது என்பதை யாரும் நினைத்துப் பாராமல் பொது மக்கள் பயத்தில் மூழ்கினர். இந்தப் பயத்தினால் தங்கள் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தற்காலிக வீடுகளில் தங்கி இருந்த மீனவ மக்கள் தங்கள் உடமைகள் மற்றும் கையில் கிடைத்த பொருட்களை எடுத்துக்கொண்டு கடலூர் நோக்கி ஓடத் தொடங்கினர்.

ஏராளமான பெண்கள். வயதான பெண்மணிகள் தங்கள் குழந்தைகளைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடி வந்தது பார்ப்பதற்கு பரிதாபமாக இருந்தது.

யாரோ கிளப்பிவிட்ட புரளியைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு கடலூர் மாவட்ட கடலோர பகுதிகளைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் பரபரப்பான பதட்ட சூழ்நிலை ஏற்பட்டது.

மேடான பகுதியை நோக்கி 500 மீற்றர் தூரத்துக்கு இரவில் மக்கள் தங்கியிருக்க வேண்டும் என மேலிடத்திலிருந்து அவசர தகவல் வந்ததாக கூறப்பட்டது. உண்மையா?புரளியா? என்பதைப் பொலிசார் முடிவு செய்வதற்குள் மூட்டை முடிச்சுக்கள்,பெட்டிகளுடன் தாழங்குடா, தேவானம் பட்டினம், பரங்கிப்பேட்டை, சோனாங்குப்பம், எம்.ஜி. ஆர்திட்டு என 50 இற்கும் மேற்பட்ட கிராமங்களில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் நகரை நோக்கி ஓட்டம் எடுத்தனர்.

இரவில் தேவானம் பட்டினத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மக்கள் வண்ணாரப் பாளையம் வரை ஓடி வந்து பாரவூர்திகளில் ஏறிச்சென்றனர். பொலி சாரும் என்ன செய்வது எனத் தெரியாமல் பதட் டத்துடன் காணப்பட்டனர். மீண்டும் சுனாமி வராது என சிலர் சத்தமாகக் கூறியதைப் பலரும் காதில் வாங்கிடும் நிலையில் இல்லாமல் பதட்டத்துடன் இருந்ததைப் பார்க்க பரிதாப காட்சியாகக் காணப்பட்டது.

இவர்கள் முகத்தில் ஒருவித கலக்கத்தைக் காண முடிந்தது. இதைப் பார்த்த ஏராளமான கடலூர் நகர மக்கள் அவர்களின் பரிதாப நிலையைக் கண்டு கண்கலங்கினர்.

*–பீகார், ஜார்க்கண்ட் தேர்தல்களின்–*

# முதல் கட்டவாக்குப்பதிவில் வன்முறை

## 6பொலிசார் உட்பட 20 பேர் பலி

(பாட்னா)

பீகார், ஜார்க்கண்ட் சட்டசபைக்கு நேற்று முன்தினம் நடந்த முதல் கட்ட வாக்குப்பதிவில் துப்பாக்கி தாக்குதல், குண்டு வீச்சு போன்ற வன்முறை சம்பவங்கள் நடந்தன. இதில் 6பொலிசார் உட்பட 20 பேர் பலியானார்கள்.

பீகார், ஜார்க்கண்ட் மாநிலங்களில் இந்த மாதம் 3,15,23, ஆகிய திகதிகளில் 3 கட்டமாகவும், அரியானாவில் இந்த மாதம் 3ஆம் திகதி ஒரேகட்டமாகவும்சட்டசபைத் தேர்தல் நடக்கும் என்று தலைமைத் தேர்தல் ஆணையகம் அறிவித்தது. அதன்படி பீகார், ஜார்க்கண்டில் முதல்கட்ட தேர்தலுக்கான வாக்குப் பதிவும், அரியானாவில் மொத்தம் உள்ள 90 தொகுதிகளுக்கான வாக்குப் பதிவும் நடந்தது. பீகாரில் 64 தொகுதிகளுக்கும் ஜார்க்கண்டில் 24 தொகுதிகளுக்கும் நேற்று முன்தினம் தேர்தல் நடந்தது. இதில் பீகார், ஜார்க்கண்ட் மாநிலங்களில் குண்டு வீச்சு, துப்பாக்கி தாக்குதல், வாக்குச் சாவடிகளை கைப்பற்றுதல் போன்ற வன்முறைச் சம்பவங்கள் பரவலாக நடந்தன.

முதல்வர் சவுதாலாவின் நாவலா தொகுதியில் அவரது [illegible]சியினருக்கும், காங்கிரஸ் [illegible]ாண்டர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதால் ஒரு ஓட்டுச்சாவடியில் வாக்குப் பதிவு 15 நிமிடம் நிறுத்தி வைக்கப்பட்டது. பீகார், ஜார்க்கண்ட், அரியானாவில் முதல்கட்ட வாக்குப் பதிவின் போது நடந்த குண்டு வீச்சு, துப்பாக்கி சண்டை போன்ற வன்முறைச் சம்பவங்களில் மொத்தம் 20பேர் உயிரிழந்தனர். ஏராளமானவர்கள், காயம் அடைந்தனர்.

# அந்தமானில் மீண்டும் பூமி அதிர்ச்சி

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் நேற்று மீண்டும் 3முறை பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. நேற்று அதிகாலை ஏற்பட்ட நில நடுக்கம் 5.2மற்றும் 5.1 என்ற ரிக்டர் அளவில் பதிவாகி இருந்தது. காலை 10.30 மணிக்கு ஏற்பட்ட பூமி அதிர்ச்சி 5.8 என்ற ரிக்டர் அளவில் பதிவாகி இருந்தது. இதனால் உயிர்ச் சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை. கடந்த டிசம்பர் 26ஆம் திகதி இந்தோனேஷியாவில் உள்ள சுமத்திராதீவில் கடலில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி காரணமாக 'சுனாமி' தாக்குதல் நிகழ்ந்தது. இதனால் இந்தோனேஷியா, இலங்கை அந்தமான், இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் லட்சக்கணக்கான பேர் உயிரிழந்தனர். இங்கு தொடர்ச்சியாக நிலநடுக்கம் ஏற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1948.01.24

நீரில் 2004.12.26



**திரு.பூபாலன் சண்முகானந்தன்**

கணக்காளர் கச்சேரி (வ.கி.மா)–முல்லைத்தீவு

பகுதிநேர கணக்காளர் நியாப்–முல்லை-மாவட்டம்

ஆனைக்கோட்டை தனில் அவதரித்து
முல்லை மாநகரில் சேவையாற்றி கடற்பேரலை
அனர்த்தத்தில் உயிர் நீத்த எம் அன்புக் கணக்காளரே
உங்களது மறைவானது எமக்கு ஓர் பேரிழப்பு.
சேவையில் இருந்தவாறே உயிர் நீத்தீர்-எம்
தேவைகள் முடியமுன் இரையானீர்... காலனுக்கு
தேடிவந்த எமக்கு உடலைக் கூடபார்க்கமுடியாதவாறு எழுந்த,
கடலன்னையின் அகோர சீற்றம்
உங்களைப் போன்ற உயர்ந்தவர்கள்
இன்றித் தவிக்கிறோம் யாம்.
தரணியில் இருந்தவாறே உங்களது
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதித்திட்டப்பணிப்பாளரும் பணியாளர்களும்,
நியாப்-நீர்ப்பாசன வளாகம்,
ஒட்டுசுட்டான்,முல்லைத்தீவு

(சி.11303)



## கேள்வி அறிவித்தல்

**தரம் V விடுதி அமைப்பதற்கான கேள்வி கோரல்**

**பிரதேச செயலர் விடுதி – பூநகரி**

மேற்குறிப்பிட்ட வேலைக்கான கேள்வி விண்ணப்பங்கள் கிளி/மாவட்ட செயலக கேள்விச் சபையால் கோரப்படுகின்றன. இக் கேள்விக்கு பெறுமதிசேர் வரியில் தங்கள் பெயரைப் பதிவு செய்து (VAT) இலக்கத்தினைப் பெற்றுக்கொண்ட தனிப்பட்ட ஒப்பந்தகாரர்களும்/நிறுவனங்களும் / சங்கங்களும் மட்டுமே கேள்வி கோர முடியும்.

இது சம்பந்தமான விபரங்கள் அலுவலக நேரத்தில் செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விப் பத்திரங்கள் 17.02.2005 நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவு நாள் 18.02.2005 காலை 10.00 மணிவரை.

தி.இராசநாயகம்,
அரச அதிபரும்,
கிளி/மாவட்ட கேள்விச் சபைத் தலைவரும்
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-11312)



இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

## மாபெரும் பரிசுப்போட்டி

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

**அம்மன் களஞ்சியம்**

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11254)

## வி.பி.கிண்ண கிரிக்கெட்

# பரபரப்பான ஆட்டத்தில் அவுஸ். பாக்கை வென்றது!



அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற வி.பி கிண்ண கிரிக்கெட் முதலாவது இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை 18 ஓட்டங்களினால் வென்று அவுஸ்திரேலியா கிண்ணத்தைக் கைப்பற்றி விட்டது.

நேற்று மெல்பேர்னில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய ஆவுஸ்திரேலிய அணி 50 ஓவர் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணியின் அன்ருசைமன்ஸ் 91 ஓட்டங்களையும் டேமியன் மார்ட்டின் 53 ஓட்டங்களையும் பெற்றனர்.



பின்னர் 238 என்ற வெற்றியிலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்ப ஓவரிலேயே சல்மன் பட்டின் விக்கெட்டை இழந்தது. அவர் ஓட்ட மெதுவும் பெறாத நிலையில் பிரட்லீயின் பந்து வீச்சில் (L.B.W) முறையில் ஆட்டமிழந்தார். அடுத்த சிறப்பாட்டக்காரரான கம்றன் அக்மல் 4 ஓட்டங்களுடன் கிலஸ்பியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார் யூசுப் யுகானா 2ஓட்டங்களில் ஆட்டமிழக்க, பாகிஸ்தான் அணி மிகுந்த இக்கட்டான நிலைக் குள்ளானது அதனையடுத்து



ஆடிய அணித் தலைவர் இன்சமாம் உல்ஹக் நிதானமாக ஆடி 51 ஓட்டங்களையும் சொகைப்மாலிக் 66 ஓட்டங்களையும் பெற்று அணிக்கு தெம்பூட்டினர் இவர்களிருவரும் ஆட்டமிழந்து செல்ல அப்துல்சராக் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தர்.

இறுதியில் 9 விக்கெட் இழப்புக்கு நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் பாகிஸ்தான் 219 ஓட்டங்களை மட்டுமே பெற்று கிண்ணத்தை பறிகொடுத்தது.

# அக்தருக்கு உடல் தகுதி சோதனை; தேறினால் மட்டுமே இந். பயணத்தில் இடம்!



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி பந்து வீச்சாளர் அக்தருக்கு உடல் தகுதி சோதனை நடத்தப்படுகிறது. பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்த மாத இறுதியில் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. இதற்காக பாகிஸ்தான் வீரர்கள் வருகிற 25 ஆம் திகதி இந்தியா வருகிறார்கள். இந்திய பயணத்துக்காக பாகிஸ்தான் அணி இன்னும் அறிவிக்கப்படவில்லை. அவுஸ்திரேலியாவில் நடக்கும் முத்தரப்பு கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணி ஆடிவருகிறது. இந்தப் போட்டிக்குப் பின்னர் இந்திய பயணத்துக்கான வீரர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே காயம் காரணமாக வேகப் பந்து வீச்சாளர் அக்தர் தற்போது ஓய்வு எடுத்து வருகிறார். அதுமட்டுமன்றி வழக்கம் போல் அவர் சர்ச்சையிலும் சிக்கி இருக்கிறார். எனவே இந்திய பயணத்துக்கான அணியில் அவர் இடம் பிடிப்பது மிகப்பெரிய கேள்விக் குறியை உண்டாக்கியுள்ளது. இது குறித்து அவரிடம் உடல்தகுதி சோதனை நடக்கவுள்ளது. இந்தச் சோதனையில் தேறினால் மட்டும் தான் அக்தருக்கு அணியில் வாய்ப்பு கொடுக்கப்படும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் கூறியுள்ளது. அக்தரின் சமீபத்திய சில செயல்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்துக்கு வெறுப்பை உண்டாக்கியுள்ளது. எனவே அவர் அணியில் இடம் பிடிப்பது கேள்விக்குறிதான்.

# சம்பியன் கோப்பை கிரிக்கெட் மும்பையில் 7 ஆம் திகதி ஆரம்பம்





(கொல்கத்தா)

மும்பையில் சம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டி 7 ஆம் திகதி தொடங்குகிறது.

இந்திய கிரிக்கெட் வீரர்கள் கலந்து கொள்ளும் சம்பியன் கோப்பை பந்தயம் மும்பையில் வருகிற 7 ஆம் திகதி முதல் 4 நாட்கள் நடக்கவுள்ளன. இந்தப் போட்டியில் வீரர்கள் காட்டும் திறமையடிப்படையில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான இந்திய வீரர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். எனவே முக்கியத்துவம் வாய்ந்த பாகிஸ்தான் பயணத்தில் இடம் பிடிக்க இளம் வீரர்களுக்கு சம்பியன் கோப்பை பந்தயம் நல்ல வாய்ப்பை உருவாக்கியுள்ளது.

இந்தியா சீனியர் ஏ.பி ஆகிய அணிகள் இந்தப் போட்டியில் மோதவுள்ளன. சீனியர் அணிக்கு கங்குலியும், ஏ அணிக்கு ராவிட்டும், பி அணிக்கு ஷேவாக்கும் கப்டனாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். காயம் காரணமாக கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக ஓய்வெடுத்து வந்த தமிழக வேகப்பந்து வீச்சாளர் பாலாஜி இந்திய சீனியர் அணியில் இடம் பிடித்துள்ளார். இந்திய அணியில் தற்போது விக்கெட் கீப்பருக்கான இடம் காலியாக இருக்கிறது.




டினேஸ் கார்த்திக், டோனி, பார்த்தீவ் ஆகிய மூன்று இளம் வீரர்களும் இந்த இடத்தைப் பிடிக்க கடுமையாகப் போராடி வருகிறார்கள். இந்திய அணியில் இருந்து பார்த்தீவ் சமீபத்தில் நீக்கப் பட்டார். எனவே பாகிஸ்தான் அணிக்கு எதிரான மோதலின் போது தினேஷ் கார்த்திக் மற்றும் டோனி ஆகியோருக்கு மாறி மாறி வாய்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இந்திய அணி பாகிஸ்தான் சென்ற போது பாலாஜி, இர்பான் பதான் ஆகிய இளம் பந்துவீச்சாளர்கள் தான் அணியில் இடம் பெற்றிருந்தனர். ஆனாலும் வலுவான பாகிஸ்தான் அணியை அவர்கள் நாட்டில் வைத்தே தோற்கடிக்க இவர்களின் பங்கு பெரிதாக இருந்தது. குறிப்பாக பாலாஜி தனி முத்திரை பதித்தார். இதனால் அவர் பாகிஸ்தான் அணிக்கு எதிரான மோதலில் சேர்க்கப்பட அதிகமான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்பட்ட வீரர்கள் விபரம் வருமாறு;

சீனியர் சவுரவ், கங்குலி(கப்டன்), டோனி (விக்கெட் கீப்பர்), யுவராஜ்சிங், வேணு கோபால்ராவ், நீரஜ்பட்டேல், அனில் கும்ளே, இர்பான் பதான், பாலாஜி, ககன்தீப சிங், ராஜேஸ் பவார், சங்கர் தவான்

ஏ அணி ராகுல் ராவிட்(கப்டன்), தினேஸ் கார்த்திக் (விக்கெட் கீப்பர்), பிரதாப் ஜாதவ், முகமது காஜ்ப், தினேஸ் மொங்கியா, முரளி கார்த்திக், அஜித் அகக்கர், சகீர்கான் சிங், யூசுப்பதான், ராபின்முத்தப்பா,

பி அணி வீரேந்தர் ஷேவாக் (கப்டன்), கார்த்திக் பட்டேல் (விக்கெட் கீப்பர்), கவுதம் கம்பீர், வி.வி.எஸ்.லட்சுமணன், ஸ்ரீராம், ரோகன் கவாஸ்கர், ரமேஷ்பவார், ஜோகிந்தர் ஷர்மா, ஆசிஷ்நெக்ரா,பால், அமித்பண்டாரி, ராயுடு.

## உதைபந்தாட்ட சம்மேளனத்தின் புதிய சட்டங்களால் சர்ச்சை

ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்மேளத்தின் சட்டங்கள் உள்ளூர் அணிகளிடையே பிரச்சினையை ஏற்படுத்தும் என ஆர்சனல் அணியின் பிரதித்தலைவர் டேவிட்டீன் கூறியுள்ளார்.

ஐரோப்பிய சம்மேளனம் ஒவ்வொரு அணியும் 4 உள்ளூர் வீரர்களை மட்டுமே 2006 ஆம் ஆண்டு ஐரோப்பிய கிண்ண போட்டிகளுக்கான அணியில் சேர்க்கலாம் என தெரிவித்துள்ளது.

இதனால் பிரிமியர் கழகங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகும் என டீன் அச்சம் தெரிவித்துள்ளதுடன் தவறான அணுகுமுறை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# தென்னாபிரிக்கா–இங்கிலாந்து பரபரப்பான போட்டியில் சமநிலையில் முடிவு!



இங்கிலாந்து தென்னாபிரிக்க அணிகளிடையே புளோபொன்ட்டினில் நடைபெற்ற 2 ஒரு நாள் போட்டி இரு அணிகளுக்கும் வெற்றிதோல்வியின்றி சமநிலையில் முடிவு பெற்றது.

கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட்டுக்களையிழந்து 270 ஓட்டங்களைப்பெற்றது. அவ்வணியின் கெவின் பீற்றர்சன் 96 பந்துகளில் 108 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். பதிலுக்கு 271 ஓட்டங்கள் என்று வெற்றியிலக்கு நோக்கி ஆடிய தென்னாபிரிக்கா அணி 50 ஓவர்களில்8 விக்கெட்டுக் களையிழந்து 270 ஓட்டங்களையே பெற்றது.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில் கடைசி 6 பந்துகளில் 3 ஓட்டங்களைப்பெறவிருந்த நிலையில் இங்கிலாந்தனியின் பந்து வீச்சாளர் காபிர் அலியின் பந்து வீச்சில் அது சாத்தியமாகாத நிலையில் தென்னாபிரிக்கா வெற்றி வாய்ப்பை இழந்ததுடன் போட்டி சமநிலையில் முடிந்தது.



# ஆண்கள் பிரிவில் அம்பாறையும் பெண்கள் பிரிவில் வவு.வும் சம்பியன்கள்

(நல்லூர்)


வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வருடாந்தம் மாவட்டங்களுக்கு இடையே நடத்தி வரும் கிராமங்களை குறுக்கறுத்து ஓடும் போட்டியில் ஆண்கள் பிரிவில் அம்பாறை மாவட்டமும், பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்டமும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இப் போட்டிகள் வவுனியா மாவட்டச் செயலகத்தின் முன்னால் ஆரம்பமாகின. ஆண்கள் பிரிவில் 1ஆம் இடத்தை அம்பாறை மாவட்டமும் 2ஆம் இடத்தை வவுனியா மாவட்டமும் பெற்றுக் கொண்டது.

பெண்கள் பிரிவில் 1ஆம் இடத்தை வவுனியா மாவட்டமும், 2ஆம் இடத்தை திருகோணமலை மாவட்டமும் பெற்றுக் கொண்டது.

வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கான வெற்றிக் கேடயங்கள் மற்றும் சான்றிதழ்களை வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.ரகுநாதன் வழங்கிக் கௌரவித்தார்.

போட்டிக்கான ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் சி.இரத்தினதுரையும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு உத்தியோகத்தர்களும் ஏற்பாடு செய்திருந்ததுடன் வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (41)



## சிந்தனைக்கு

சத்தியத்திற்காகச் சாகத்துணிந்து விட்டால்,ஒரு சாதாரண மனிதப்பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 05-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## இப்போதைக்கு இல்லை!

"சுனாமியால் பாதிக்கப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்பும் வகையில் சர்வதேச சமூகத்தால் வழங்கப்படும் உதவிகளையும், சமாதான முயற்சிகளையும் இணைத்துப் பார்க்க முடியாது" என்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அறிவுறுத்தலானது சமாதானம் குறித்து அவரின் அடிமனத்திலுள்ள உணர்வின் காரணத்தினால் எழுந்ததாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இக்கூற்றுக்கள் மூலம் எங்கே சுனாமி அனர்த்தத்திற்கான உதவிகளையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளுடன் சர்வதேசம் இணைத்துவிடுமோ என்ற அச்சத்தின் / பயத்தின் வெளிப்பாடு என்றே கூறலாம். அவ்வாறு இல்லாது விட்டால் இத்தன்கயதொரு அறிவிப்பைச் சனாதிபதி சந்திரிகா வெளியிட்டிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கமாட்டாது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு இத்தகையதொரு பயம் ஏற்படுவதற்கும் காரணமும் இல்லாமல் இல்லை. டோக்கியோவில் நடைபெற்ற சிறிலங்காவிற்கு உதவுவோர் மாநாட்டில் 45000 கோடி ரூபா நிதியுதவி புரிய உதவி புரிவோர் தயாராக இருந்தபோதும், அவர்கள் நிபந்தனை ஒன்றையும் முன்வைத்தனர். இந்நி பந்தனை சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்திலேயே நிதியுதவி என்பதாகும்.

ஆனால், தற்பொழுது சிறிலங்காவிற்கு சர்வதேச சமூகம் அளித்துள்ள நிதியுதவியானது மனிதாபிமான அடிப்படையிலானது. அதாவது சுனாமியால் ஏற்பட்ட அனர்த்தத்தினை உணர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத்திற்கெனவும், மீள் கட்டுமானத்திற்கெனவும் வழங்கிய நிதியுதவியாகும்.

ஆகையினால், மனிதாபிமானத்தின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட இந்நிதியுதவிக்கு நிபந்தனைகள் விதிக்கப்படும் என எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால், உதவி வழங்குவோரிடம் இருந்து பொதுவான எதிர்பார்க்கை ஒன்று உள்ளது. அதாவது, இச்சுனாமி நிதி உதவிகள் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் வகையிலான செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்பதே.

அதாவது, சர்வதேச சமூகம், குறிப்பாக, உதவி வழங்கும் நாடுகள் எவ்வாறு மனிதாபிமான அடிப்படையில் இவ் உதவிகளை வழங்க முன்வந்துள்ள அதேவேளை அரசாங்கமும் மனிதாபிமான அடிப்படையிலும் நீதியான முறையிலும் இவ் உதவிகளைப் பகிர்ந்தளித்து சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கானதொரு வாய்ப்பை உருவாக்குதல் வேண்டும் என்பதாகும்.

ஏற்கனவே, விடுதலைப்புலிகள் இயக்கமும் இச்சந்தர்ப்பத்தை அரசாங்கம் பயன்படுத்தி தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கைகளையும், புரிந்துணர்வுகளையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளது. அதாவது, சர்வதேச நிதி உதவிகளை பாதிப்புக்கேற்ற வகையில் சமச்சீராகப் பங்கீடு செய்வதன் மூலம் சமாதானப் பேச்சுக்களுக்கான வாய்ப்பை உருவாக்கிக் கொள்ள முடியும் எனத் தெரிவித்திருந்தது.

ஆனால், அரசாங்கம் அவ்வாறு நடந்துகொண்டதாக இல்லை. நிவாரண உதவிகள் வழங்கலில் தமிழர் தாயகப் பகுதி புறக்கணிப்பிற்கு உள்ளாகியுள்ளது மட்டுமல்ல, தமிழர் தாயகப் பகுதியில் நிவாரணப் பொருட்கள் விநியோகம் செய்வதற்கும் தடைகள், முட்டுக்கட்டைகள் போடப்பட்டதும் உண்டு.

இந்நிலையில், சனாதிபதி சந்திரிகா தற்பொழுது சுனாமி உதவிகளையும், சமாதான முயற்சிகளையும் ஒன்றிணைக்கப்போவதில்லை எனக் கூறியிருப்பதானது சமாதான முயற்சிகள் தொடர்பாக தற்போதைக்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுக்கப்போவதில்லை என்பதன் வெளிப்பாடே ஆகும்.

சுனாமி அழிவும், தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டமும் வெவ்வேறு வகைப்பட்டவைதான் எனினும், ஒன்றிலிருந்து ஒன்றிற்கு முன்னேறுவோம் என்பதே சர்வதேசத்தினதும், புலிகளினதும் கோரிக்கையாகும். ஆனால், சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடானது ஒன்றிலிருந்து ஒன்றிற்கு முன்னேற முடியாது என்பதாகவுள்ளது.

சனாதிபதி சந்திரிகாவின் இந்நிலைப்பாட்டிற்குப் பல்வேறு காரணிகள் இருக்கலாம். அதாவது சமாதான முயற்சிகளுக்கு நிதியுதவி, நிபந்தனையாகலாம் என்ற அச்சம் அல்லது சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதை அரசாங்கம் விரும்பாதது காரணமாக இருக்கலாம். ஆனால், காரணம் எதுவாகிலும் சனாதிபதி சந்திரிகாவின் இவ் அறிவிப்பானது அரசாங்கம் சமாதானப்பேச்சுவார்த்தைகளை தற் போதைக்கு ஆரம்பிக்கும் எந்த நோக்கத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதையே வெளிப்படுத்துவதாய்யுள்ளது.

# சொந்த மண்ணில் வாழும் உரிமை வலி.வடக்கு மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது

## -யாழ்.இடம்பெயர்ந்தோர் ந. ச.சனாதிபதிக்கு மகஜர்

ஈழத்தமிழ் மக்கள் மீது பேரினவாத ஆட்சியாளர்கள் 1948 ஆம் ஆண்டிலிருந்து கட்டவிழ்த்து விட்ட ஒடுக்குமுறையின் உச்சகட்டமாகக் கடந்த இருதசாப்தங்களாக வலிகாமம் வடக்கு மக்களுக்கு சொந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் மிகப்பெரிய மனித உரிமை மீறல்களில் இதுவும் ஒன்றாகும். வலி.வடக்கில் மட்டும் சுமார் ஒரு இலட்சம் மக்கள் வாழ்ந்த பிரதேசம் உயர் பாகாப்பு வலயம் என்ற இரும்புத் திரையால் மூடப்பட்டுள்ளது. வடக்குக்கிழக்கில் இது போன்ற உயர்பாதுகாப்பு வலயங்கள் பலப்பலவாகும் என யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன் புரி நிலையங்களின் சமாசம் நேற்று சிறிலங்கா சனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தமகஜரில் மேலும் தெரிக்கப்பட்டுள்ளதாவது ;

புலம்பெயர்ந்து நாம் பட்டுவரும் அவ லங்கள் பற்றித் தங்களுக்குப் பல போதும் அனுப்பிவந்த மகஜர்கள் தங்கள் கவனத்தை ஈர்ப்பதற்கெனச் செய்த போராட்டங்கள் எதனையும் தாங்கள் கவனமெடுத்ததாகத் தெரியவில்லை. வீடுகளை இழந்து தொழில்களை இழந்து பத்து, பன்னிரண்டு அடிச் சதுர முகாம்களில் நடைப்பிணங்களாக வாழும் எம்மவர் நிலைமை தங்களுக்கு எப்படித் தெரியப் போகிறது? உங்கள் வீட்டு நாய்களுக்கு நீங்கள் கொடுக்கும் மதிப்புக்கூட இந்த மண்ணில் எமக்கில்லை.

எமது குடும்பங்கள் நாளுக்கு நாள் எமது கண்முன்னே அழிந்து கொண்டு போவதைப் பேய்கள் கண்டாற் கூட இரக்கம் கொள்ளும் தாங்களும் பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும் ஒரு தாய் என்பதால் எமது உணர்வுகளைக் கூறுகின்றோம். தாங்கள் தங்கள் பிள்ளைகளை எவ்வாறு வளர்க்கிறீர்கள் என்பதும் தெரியும். ஆனால் எங்களது பிள்ளைகளை நடைப்பிணங்களாக அலைய விட்டு மகிழ்ச்சி அடைகிறீர்கள்.

சுனாமியால் வடகிழக்கில் அழிக்கப்பட்ட குடிசைகளில் சுமார் 1500 இற்கும் மேற்பட்டவை வலிகாமம் வடக்கிலிருந்து புலம்பெயர்ந்து கடற்கரையோரங்களில் வாழ்ந்த மீனவமக்களுடையவை என்பதும் தங்களுக்குத் தெரிந்திருக்காது. அக்குடும்பங்கள் இழந்த உயிர்கள் உடைமைகளைத் தனிக்கணக்கு எழுதியும் வைத்திருக்க மாட்டீர்கள். விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக அம் மக்கள் இன்று துன்பத்தைச் சுமக்கிறார்கள்.

எனவே சுதந்திரதினம் என்று தாங்களும் தங்கள் இனமும் கொண்டாடிக் குதூகலிக்கும் இன்றைய நாள் எம்மை பொறுத்தவரை எமது இனத்துக்கு மரண ஓலை எழுதப்பட்ட கரிநாளாகும்.

மாற்று இடங்களில் குடியேறும்படி எம்மை இன்று கேட்க முற்படுகின்றீர்கள். தங்களை வேற்று நாட்டிற்குச் சென்று சனாதிபதியாக இருங்கள் என்று நாம் கேட்பதற்கு ஒப்பான சித்தாந்தம் இதுவாகும்.

எம்மை எமது மண்ணில் வாழ விடுங்கள். அல்லாவிடின் எங்கள் பிறப்புரிமையை வென்றெடுக்க வெகுவிரைவில் நாம் வழியைத் தேடுவது தவிர்க்கமுடியாததாகும். (36,27)

## -யாழ்.ஊர்காவல் துறைப்பகுதியில்-

# வீதியை வழிமறித்து அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தை அகற்றக்கோரிமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகம் ஊர்காவற்றுறை கிழக்குத் தெருவில் நிலை கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா பொலிசாரை அங்கிருந்து வெளியேறுமாறு கோரி அப்பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டப்போராட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை கிழக்குக் கிராமங்களுக்குச் செல்லும் மேற்படி வீதியில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா பொலிசாரை மேற்படி வீதியால் பொது மக்கள் பாவனை செய்யத்தடை விதித்துள்ளனர்.

இதனால் ஊர்காவற்றுறை கிழக்கு கிராமத்திற்குச்செல்லும் மக்கள் அப்பகுதி தனியார் காணி ஒன்றினூடாக அமைக்கப்பட்ட குறுக்குப்பாதை ஒன்றினாலேயே பயணிக்க வேண்டியநிலை உள்ளது.

இந்நிலையில் மேற்படி பாதை அமைக்கப்பட்டிருக்கும் தனியார் காணியின் உரிமையாளர் அக்காணியூடாக பயணிக்க அனுமதி மறுத்து வருவதனால் பொது மக்கள் ஊர்காவற்றுறை கிழக்கிற்கு செல்ல முடியாது போக்குவரத்து துண்டிக்கப்படக் கூடிய நிலை காணப்படுகிறது.

இதனையடுத்து இத்தனைக்கும் காரணமாக ஊர்காவற்துறை கிழக்கு வீதித்தெருவில் அமைந்திருக்கும் சிறிலங்கா பொலிஸ் நிலையத்தை அகற்றுமாறு கோரியே இப்போராட்டம் நடத்தப்பட்டது.

ஊர்காவற்றுறை மாதா கோவிலிலிருந்து பேரணியாக புறப்பட்ட மக்கள் ஊர்காவற்துறை நகரூடாக பொலிஸ்நிலையத்தைச் சென்றடைந்து அங்கு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

நேற்று முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 1 மணி வரையில் நடைபெற்ற இப்போராட்டத்தினையடுத்து ஆர்ப்பாட்டக் காரர்களுடன் சந்தித்துப் பேசிய சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி

மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று பொலிஸ் நிலையத்தை அகற்ற முடியாது என்றும் பொது மக்கள் தமது கோரிக்கைகளை எழுத்து மூலம் தந்தால் அவை தொடர்பில் பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பலநூற்றுக்கணக்கானோர் திரண்டு நடத்திய இப்போராட்டத்தின போது பொலிசாரை வெளியேறக் கோரும் பல்வேறு கோஷங்களும் எழுப்பப்பட்டன. (27,33)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வரும் புதன்கிழமை கொடுப்பனவு

## –புதுக்குடியிருப்பு உ. அ. தெரிவிப்பு

(புதுக்குடியிருப்பு)

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் செ.தயானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார். அந்த வகையில் வங்கியில் வைப்புச் செய்து தனிநபர் ஒருவராக இருந்தால் 2500 ரூபாவும் ஒருவருக்கு மேற்பட்டவர்களுக்கு 5000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது என குறிப்பிட்ட அவர் எதிர்வரும் 09.02.2005 புதன்கிழமை காலை புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கணக்கு திறந்துவைப்பு செய்யப்படும் என அவர் தெரிவித்தார். இதே வேளை இதேதினம் சுனாமியால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கான நிவாரணத்துக்குரிய முத்திரையும் வழங்கப்படவுள்ளளதாக அவர் மேலும் தெரிவித்தார். மேலும் இது வரையிலும் மரணக் கொடுப்பனவு வழங்கப்படாதவருக்கு மரணக்கொடுப்பனவு வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளவேணும் எனவும் அவர் குறிப்பிட்டார். (08)

## —ஊழியர் பற்றாக்குறை—

# கொள்ளுப்பிட்டி அஞ்சல் அலுவலகத்தை மூடிய அஞ்சலக ஊழியர்கள்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டி அஞ்சலகம் நேற்று முன்தினம் ஊழியர்கள் பற்றாக்குறையை காரணம் காட்டி மூடப்பட்டமை குறித்து அஞ்சல் மா அதிபர் சேவின் சேனாதீர விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். அஞ்சலகத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்புமாறு கோரியே அங்கு சேவையில் இருந்த ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டதுடன் அஞ்சலகத்தையும் மூடினர். இதனால் அங்கு வந்த வாடிக்கையாளர்கள் பெரிதும் சிரமங்களுக்குள்ளாகினர். இந்த நிலையில் அஞ்சலகத்தை மூடிய ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அஞ்சல் மா அதிபர் தெரிவித்துள்ளார். (32)

## –போதைப்பொருள் தொடர்பான–

# குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பதில் வேறொருவர் நீதிமன்றில் ஆஜர்

போதைப்பொருள் குற்றச்சாட்டு தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டவருக்கு பதிலாக மற்று ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜரானமை குறித்து பொலிஸ் மா அதிபர் விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் மீது போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. எனினும் நீதிமன்ற விசாரணையின் போது குறிப்பிட்டவருக்குப்பதிலாக மற்று ஒருவர் ஆஜராகியுள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து இந்தச் சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (32)

### கிளி.யில் கட்டப்பட்டு வரும்-

# நீர்த்தாங்கி உச்சியிலிருந்து வீழ்ந்து பணியாளர் ஒருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப் பெற்றுவரும் நீர்த்தாங்கியில் நிர்மாணப் பணிபுரிந்த ஒருவர் தாங்கியின் உச்சியிலிருந்து வீழ்ந்ததில் படுகாயங்களுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டபின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் நேற்று பிற்பகல் 4.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

லிப்டின் மூலம் நீர்த்தாங்கியின் மேற்பகுதிக்கு சீமெந்துக் கலவையினை எடுத்துச் சென்ற வேளையில் லிப்டின் கேபிளில் ஏற்பட்ட கோளாறின் காரணமாக லிப்ட் அறுந்து விழுந்ததினால் மேற்படி லிப்டில் சென்ற நபரும் அதனு டன் சேர்ந்து நிலத்தில் விழுந்த போதே மேற்படி நபர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவசரமாக அனுப்பிவைக்கப்பட்டார்.

மகியங்கனையைச் சேர்ந்த வசந்த (வயது-23)என்பவரே மேற்படி சம்பவத்தில் படுகாய மடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(சோ)



நீர்த்தாங்கி நிர்மாணத்திற்கு பயன்படுத்தப்பட்ட உயர்த்தி (லிப்ற்) வீழ்ந்து நொருங்கிக்கிடப்பதையும், படுகாயமடைந்தவரையும் மேலுள்ள படங்களில் காணலாம். (படம் சோதி)

## தென்...

மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்கள் பலவற்றில் ஜூம்மா தொழுகையின் பின்னர் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடை பெற்றன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்கள் மீது காட்டப்படும் அக்கறையை கிழக்குப் பகுதி மக்கள் மீது காட்டவில்லையென சாய்ந்த மருது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோசித்தனர்.

இதேவேளை கோட்டைக் கல்லாறு நாகதம்பிரான் ஆலயத்தின் முன்பாக நேற்று மதியம் 12.45 மணியளவில் மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அரசினால் அறிவிக்கப்பட்ட எந்தவொரு நிவாரணமும் தமக்குக் கிடைக்கவில்லையெனவும் உணவோ, உடையோ இன்றி தாங்கள் பெரும் கஷ்ரமடைவதாகவும் கூறியுள்ளனர்.

இதற்கு உடனயாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அரசாங்க அதிபர் ஊடக அரசைக் கேட்டுள்ளனர்.

## க.கா.குழு

தூதுவர் கான்ஸ் பிரஸ்கார் அவர்கள் காலை 9.30 மணிக்கு அரசியல் துறைப்பொறுப்பாளரைச் சந்திப்பார். இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுபதில் தலைவர் காலை 11 மணிக்கு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை சந்தித்து கலந்துரையாடுவார். (ச)

## வலி...

போதும் தமிழ் மக்கள் ஏற்க மாட்டார்கள் என்பதனையும் வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இப்போராட்டத்தில் தமிழத் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், கி.சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் உட்பட வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் முடிவில் தமிழினத்தின் அடிப்படை அபிலாசைகளை வலியுறுத்தி வலி. வடக்குஇடம் பெயர்ந்தோர் நலன் புரி நிலையங்களின் சமாசத்தினால் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் ஊடாக சனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது.

இதன் போது ஆயுதம் தரித்த சிறிலங்கா இராணுவச் சிப்பாயினர் திடீரென அவ்விடத்துக்குவந்து போராட்டத்தை குழப்ப முற்பட்ட போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் இது மக்களது உரிமைப் போராட்டம் இதில் தாங்கள் தலையிட வேண்டாம் உடன் வெளியேறுமாறு கேட்டுக் கொண்டார். அதனை அவ் இராணுவச் சிப்பாய் ஏற்க மறுத்ததால் இராணுவத்திற்கும், மக்களுக்கும் இடையில் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து நீண்ட நேரத்தின் பின்னரே இராணுவத்தினர் அவ்விடத்தை விட்டு விலகினர். இதனைத் தொடர்ந்து போராட்டம் அமைதியான முறையில் இடம் பெற்றது. இந் நிகழ்வின் போது சிவில் உடைதரித்த இராணுவ புலனாய்வு துறையினர் மக்களை அச்சுறுத்தும் வகையில் அவ்விடத்தில் செயற்பட்டனர்.

(33,36,27,41)

## கறுப்புக்...

இலங்கையின் 57 ஆவது சுதந்திரதினமான நேற்று கிளிநொச்சி மாவட்டத்திலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னெடுக்கும் முகமாக நேற்றைய தினம் அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் போன்ற இடங்களில் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டது. அடுத்து மாவட்ட பேரிகை குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் ஒரு எழுச்சி நிகழ்வும் நடைபெற்றது. சுதந்திரமா? யாரால் யாருக்கு என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்வின் ஆரம்பநிகழ்வாக இன ஆதிக்க வல்லரசுகளால் அநியாயமாக கொல்லப்பட்ட மக்களின் நினைவான பொதுச்சுடரினை திருவையாறு மகாவித்தியாலய அதிபர் ஏற்றிவைத்தார்.

அடுத்து துக்கதின கறுப்புக் கொடியினை கவிஞர் புதுவை அன்பன் ஏற்றினார். தொடர்ந்து பேரிகைத் தலைவர் வேளமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்புரையினை அரசியல் துறையைச்சேர்ந்த புலிமறவன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு அவர்கள் சுதந்திர தினத்தோடு ஒட்டிய ஒரு கருத்துரையினை நிகழ்த்தினார். அடுத்து கவியரங்கம் ஒன்று நடைபெற்றது.

மேற்படி துக்கதின நிகழ்வில் வர்த்தகசங்க உறுப்பினர்கள் பொதுமக்கள் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னாரில் சிறிலங்காவின் 57 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மக்கள் பூரண துக்க தினம் கடைப்பிடித்துள்ளனர். இதன் படி வர்த்தக நிலையங்கள் தனியார் நிறுவனங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. மக்கள் தமது வீடுகளில் கறுப்புக் கொடிகட்டி பறக்க விட்டனர். எவ்வித வாகனப் போக்குவரத்தும் வீதிகளில் காணமுடியவில்லை. சிறிலங்காவின் 57 ஆவது சுதந்திர தினமான நேற்று யாழ். குடா நாடெங்கிலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் 57 ஆவது சுதந்திர தினமான நேற்று யாழ்.குடாநாடெங்கிலும் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியம் மற்றும் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம், யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் அழைப்பின் பேரில் இத் துக்க தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன் போது வீதிகள், பொது இடங்கள், யாழ். பல்கலைக்கழகம், தொழில் நுட்பகக் கல்லூரி, தனியார் நிறுவனங்கள் என்பவற்றில் எல்லாம் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு மரணவீடு போல் தோரணங்கள், வாழைக்குலை கள் கட்டப்பட்டு சோககீதங்களும் ஒலிக்கவிடப்பட்டிருந்தன. யாழ்.பல்கலைக்கழக நுழைவாயிலில் மொந்தன் வாழைமரம் நாட்டப்பட்டு கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு கொடிக் கம்பத்தில் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டு சோககீதங்கள்இசைக்க விடப்பட்டிருந்தது. வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதி களிலுள்ள பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட அரச திணைக்களங் களில் அதிகாலை வேளையுட னேயே கறுப்புக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

# தமிழீழ வீதிப்போக்குவரத்து சட்டத்தில் திருத்தங்கள்

(அலுவலக செய்தியாளர்)

அதிகரித்துவரும் வீதிவிபத்துக்களைத் தடுக்கும் நோக்கமாக தமிழீழ வீதிப்போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பெற்றுள்ளதாக தமிழீழ நீதி நிர்வாகத்துறை சட்டவாக்கச் செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி திருத்தச்சட்டம் இன்று 5ஆம் திகதி முதல் நடை முறைக்குக் கொண்டு வரப்படுகிறது.

எனவே அனைவரும் போக்குவரத்து சமிக்ஞைகளையும் போக்குவரத்து விதிகளையும் கவனத்திற்கொண்டு செயற்படுமாறு தமிழீழ நீதிநிர்வாகத்துறை சட்டவாக்கச் செயலகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (சோ)

# மட்டு.நகர கிராம சேவையாளரின் வீட்டிற்கு கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு நகரப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை கிராம சேவையாளர் ஒருவரின் வீட்டிற்கு கைக்குண்டு வீச்சுத் தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வன்டிங்ஸ் வீதியில் உள்ள தணிகாசலம் எனப்படும் கிராம சேவையாளருடைய வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. வீட்டிற்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவத்திற்கான காரணம் தெரியவரவில்லை

### தம்புள்ள பகுதியில்

# மோப்ப நாய் பயிற்சி குறித்து பொலிசார் விசாரணை

தம்புள்ள ஸ்ரீகிரிய என்ற இடத்தில் ஜெர்மனியர் ஒருவர் நடத்தி வரும் மோப்பநாய்ப் பயிற்சி சேவை தொடர்பில் பொலிச்சார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் இங்கு கண்காட்சி நடத்தப்போவதாகக் கூறி சுமார் 14 உயர் ரக மோப்ப நாய்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் பின்னர் இங்கு நாய்களைக்கொண்டு பயிற்சி நடத்தப்பட்டு வருவதாக ஊர் மக்கள் தெரிவித்துள்ளார்கள். இதில் ஊர் மக்களுக்கு சந்தேகம் ஏற்படப் பிரதான காரணம் என்னவெனில் குறிப்பிட்ட இடத்தில் பணியாற்றும் நான்கு இளைஞர்களும் வடக்குப் பகுதியை சேர்ந்த தமிழ் இளைஞர்கள் என்பதினாலாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32)

# பிற்போடப்பட்ட கூட்டங்கள் நடைபெறும் நேர அட்டவணை

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் காரணமாக நடாத்தப்படாதிருந்த வழமையான கூட்டங்கள் இமாதம் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பின்வரும் நேர அட்டவணைக்கமைய நடாத்தப்பெறவுள்ளது.

வீடமைப்புக் குழுக் கூட்டம் மு.ப.9.00 மணி, அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம் மு.ப.10.00 மணி,மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் பி.ப.2.00 மணி,மாவட்ட கடற்றொழில் அபிவிருத்திக் குழுக் கூட்டம் பி.ப.3.30 மணி எனவே சகல அங்கத்தவர்களையும் மேற்படி கூட்டங்களுக்கு தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம வேண்டியுள்ளார். (சோ)

## முல்லையில்...

தற்கான பகுதியை தெரிவு செய்தல் தொடர்பாக நடைபெற்ற இக் கலந்துரையாடலில் இடைத்தங்கல் முகாம்களை அமைப்பதில் ஏற்பட்டு வரும் தாமதத்திற்கான காரணங்கள் இனங்காணப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளும் முன் வைக்கப்பட்டு மிக விரைவாக முகாம்களை அமைத்து பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களை முதற் கட்டமாக குடியமர்த்துவதற்கும் முடிவெடுக்கப்பட்டது. இதே வேளை நிரந்தர வதி விடங்களை அமைப்பதற்கு ஏதுவான பகுதிகளில் நிரந்தரமாக காணிகளை வழங்கி அங்கு குடியிருப்புக்களை அமைத்துக் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு இடைத்தங்கல் முகாம்களில் குடியமர்த்தப்படும் மக்களுக்கு உடனடியாக சமையல் உபகரணங்கள் உட்பட அனைத்து பாவனைப் பொருட்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டதோடு மீன்பிடிப்பதற்கான துறைகளை ஒவ்வொரு கிராமத்தவரும் தமக்கு முன்னர் அனுமதித்த பகுதியையே வழங்குமாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரிடம் கேட்டுக் கொண்டதற்கமைவாக அப்பகுதிகளை அந்தந்த கிராம மக்களுக்கான மீன்பிடித்துறைகளாக வழங்கவும், வாடி வீடுகளை கடற்கரையிலிருந்து 50 மீற்றருக்கு அப்பால் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு செயலணிக்குழுவைச் சேர்ந்த ஈழமாறன், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த சிவனடியார், கடற்புலிகளின் முல்லைத்தீவு அரசியல் துறைப் பொறுப்பாளர் ரங்கன், முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சமாசத் தலைவர் மரியராசா மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழக முல்லை மாவட்ட பொறுப்பாளர், தமிழீழ நிர்வாக சேவை பிரதிநிதிகள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், முல்லைத்தீவு மக்கள், வேலைத் திட்டங்களை முன்னெடுக் கும் நிறுவனங்களின் பகுதிப் பொறுப்பாளர்கள், பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச)


காணி விற்பனைக்குண்டு

கிளிநொச்சி இரத்தினபுரத்தில் – கிளிநொச்சி நகரக்குளம் [5அடிவான்] புதுப்பாலம் சந்திக்கும், இரத்தினபுரம் மாதா கோவிலுக்கும் இடையில் உள்ள காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
110/2, திருவையாறு,
கிளிநொச்சி.

தொலைபேசி இலக்கம்:-
024-2224247
0776-059672

(சி.11256)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது